2816

T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: LXIX NO: 3

October 15th 1984

C

D 1
V211,31 N84
N84.69.3;1
136278

11018/85

வெளியீடு 27-4-85] [Issued 27-4-85

தமிழ்நாடு ... வரவேற்பு ...
2 ... 1985
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர் ... 8

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

2816

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, அக்டோபர் 15, 1984 - தொகுதி LXIX எண் 3

Monday the 15th October 1984 - Volume LXIX No 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras - 600 009

விலை: ரு. 3-50 காசுகள்] Price Rs. 3-50 paise

D
Y2??.31 N84
N84-69-331
136278
சென்னை-600 009.

# உள்ளடக்கம்

**15—10—1984**


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—
   உடுக்குறியிடாத வினாக்கள் .. .. .. 435—536

2. தகவல் கோரல்—
   தமிழக முதல்வர் அவர்கள் உடல்நலம் குறித்து 536—540

3. அரசினர் தீர்மானங்கள்—
   (அ) விதி 31-ஐத் தளர்த்தல் .. .. .. 540
   (ஆ) அலுவல் வரிசையில் மாற்றம் .. .. 541
   (இ) விதிகள் 125 மற்றும் 127-ஐத் தளர்த்தல்.. 553
   (ஈ) பேரவை ஒத்திவைக்கப்பெறுதல் .. .. 555

4. அறிக்கை அளித்தல்—
   தமிழக முதல்வர் அவர்கள் உடல்நலம் குறித்து 541—543

5. அரசினர் தனித் தீர்மானம்—
   தமிழக முதல்வர் அவர்கள் உடல்நலம் பெற வேண்டிக் கொள்ளுதல். .. .. .. 543—547
   மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.. 540—543
   திரு. அன்பில் தர்மலிங்கம் .. .. .. 545
   திரு. ரா. உமாநாத் .. .. .. .. 543—544
   திரு. இரா. கருப்பையா .. .. .. 539, 545
   திரு. கே. சௌந்திரராசன் .. .. .. 545
   திரு. பி. முகமது இஸ்மாயில்.. .. .. 546
   திரு. ப. நெடுமாறன் .. .. .. 546
   திரு. குமரி அனந்தன் .. .. .. 546
   திரு. கி. சட்டநாத கரையாளர் .. .. 546
   திரு. ஏ. சாகுல் ஹமீது .. .. .. 546
   திரு. கே.எஸ்.ஜி. ஹாஜா செரீப் .. .. 547

6. அறிவிப்புகள்—
   (அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1978-79 (ஆ.கச.). 547
   (ஆ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு 1984 (ஆ.இ.). 548
   (இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1984-85 (ஆ.இ.). 549
   (ஈ) நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு, 1984 (ஆ.இ.). 553

பக்கங்கள்

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1978-79 வாக்கெடுப்பு. 548

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு 1984

(ஆ) நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு 1984 554—555

9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1984-85 வாக்கெடுப்பு. 550—552

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 555—556

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, அக்டோபர் 15, திங்கட்கிழமை

புரட்டாசி 30, ரக்தாக்ஷி. திருவள்ளுவர் ஆண்டு 2010

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராஜாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல் தெரிதல் வல்லா ரகத்து''

குற்றம் நீங்கிய சொற்களை ஆராய்வதில் வல்ல அறிஞரிடத்தில், பல நூல்களையும் கற்று அறிந்தவரின் கல்வியானது நன்றாக தோன்றும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடாத வினாக்கள்

நெடுஞ்சாலைத் துறை-புதுக்கோட்டை டிவிஷனை இரண்டாகப் பிரித்தல்.

1—வினா எண் 17061—திரு. ப. செ. சென்னமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத் துறையில் புதுக்கோட்டை டிவிஷனை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

விடை—

இல்லை.

விவசாயிகளுக்கு வழங்கும் உரங்களுக்கு மைய அரசு மானியம்.

2—வினா எண் 17079—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகளுக்கு வழங்கும் உரங்களுக்கு மைய அரசு மானியம் வழங்க வேண்டுமென மாநில அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**வேடசந்தூர், திண்டுக்கல் வட்டங்களில் வெங்காயப் பயிரில் ஏற்படும் இலைக்கருக்கல் நோயைத் தடுக்கும் நடவடிக்கை.**

3—வினா எண் 17080—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர், திண்டுக்கல் வட்டங்களில் வருடா வருடம் ஆவணி, புரட்டாசி, மார்கழி, தை மாதங்களில் வெங்காயப் பயிரில் கடுமையான இலைக்கருக்கல் நோய் விழுந்து பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு நிரந்தர நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பயிரில் நோய் ஏற்பட்ட சமயத்தில் இதனை ஆய்ந்து தேவையான பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளவும், விவசாயிகளுக்கு மானிய விலையில் மருந்துகளை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்நோய்த் தடுப்பு முறை பற்றி மதுரை வேளாண்மைப் பல்கலைக் கழக நோயியல் பிரிவு பேராசிரியரின் கருத்தின்மேல் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தோட்டக்கலைத்துறையால் மேற்கொள்ளப்பட்டது. வரும் காலத்தில் இந்த நோயினின்று பயிர்களைக் காக்க முன்கூட்டியே சாகுபடியாளர்களிடம் நோய்த்தடுப்பு முறை பிரபலப்படுத்தப்படும்.

**காவிரி, வைகை, பெரியாறு, தாமிரபரணி நதிகளை புதுக்கோட்டை, கிழக்கு முகவை மாவட்டங்கள் உபயோகிக்க அபிவிருத்தி செய்யும் திட்டம்.**

4—வினா எண் 17085—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) காவிரி, வைகை, பெரியாறு, தாமிரபரணி போன்ற நதிகளில் வெள்ளம் வரும்பொழுது, அதனை புதுக்கோட்டை, கிழக்கு முகவை மாவட்டங்கள் உபயோகிக்கும் வகையில் அபி விருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் தமிழக அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



2816



விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.**

5—வினா எண் 17091—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதால் பணிகள் பாதிக்கப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தேவையளவுக்குப் பணியாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கை மருத்துவ விதித் தொகுப்பில் நிர்ணயிக்கப்பட்ட அலகுகளின்படியே உள்ளதால் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சுகாதாரப் பணிகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

(ஆ) போதுமான அளவு பணியாளர்கள் உள்ளதால் இக் கேள்விக்கு இடமில்லை.

**நெடுஞ்சாலை ஓரங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்.**

6—வினா எண் 17096—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் வடிகால் வாரியம் நெடுஞ்சாலை ஓரங்களில் நெடுஞ்சாலைத் துறை நிலத்தில் போர்வெல் போட மறுப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

விடை—

(அ) நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலை ஓரங்களில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் எவ்வித மறுப்பும் தெரிவிப்பதில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1984 அக்டோபர் 15

தர்மபுரி பகுதியில் இந்திய புவியியல் சர்வே குழு கண்டுபிடித்துள்ள தங்கப் படிவங்கள்.

7—வினா எண் 17105—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய புவியியல் சர்வே குழு 1982 நவம்பரில் தர்மபுரி பகுதியில் ''தங்கப் படிவங்கள்'' இருப்பதாக கண்டு பிடித்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அவர்கள் செய்த சோதனைகளில் எடுத்த பெரும் பாலான மாதிரிகளில் 1 டன்னிற்கு 0.1 கிராம் அளவு தங்கமும், ஒன்று அல்லது இரண்டு மாதிரிகளில் டன்னுக்கு 4 முதல் 7 கிராம் அளவு தங்கமும் உள்ளதெனக் கண்டறியப்பட்டது. இந்த இருப்புகள் பொருளாதார ரீதியில் இலாபகரமானவை அல்ல. எனினும் ஆய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

உடையார்பாளையம் அரசு மருத்துவமனையை விரிவாக்கும் திட்டம்.

8—வினா எண் 17117—திரு. பி. தங்கவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையத்தி லிருக்கும் அரசு மருத்துவமனையை விரிவாக்கும் திட்டம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

விடை—

உடையார்பாளையம் அரசு மருத்துவமனையை விரிவாக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

கும்பகோணத்தில் சுற்றுலா விடுதி அமைத்தல்.

9—வினா எண் 17134—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் சுற்றுலா வாரியத்தின் சார்பில் சுற்றுலா விடுதி அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?



1984 அக்டோபர் 15]

விடை—

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் இல்லை.

கும்பகோணம்-கோமல் வரை நகரப் பேருந்து விடல்.

10—வினா எண் 17137—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திலிருந்து கோமல் வரை நகரப்பேருந்து விட சோழன் போக்குவரத்துக் கழகம் அரசிடம் அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திலிருந்து அம்மாசத்திரம், திருபுவனம், திருவிடைமருதூர், ஆடுதுறை, சாத்தனூர் மற்றும் நச்சினார்குடி வழியாக கோமலுக்கு நகரப் பேருந்து விடுவதற்கு சோழன் போக்குவரத்துக் கழகத்துக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டு விட்டது. இந்த வழித் தடத்தில் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து 8-4-1983 முதல் ஓடிக்கொண்டிருக்கிறது.

திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு.

11—வினா எண் 17138—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

[1984 அக்டோபர் 15

ஆலத்தூர் ஊராட்சியில் உயர்நிலைப்பள்ளி துவக்குதல்.

12—வினா எண் 17152—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் ஆலத்தூர் ஊராட்சியில் உயர்நிலைப்பள்ளி துவங்க அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உயர்நிலைப்பள்ளி துவங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருவாஞ்சியத்தில் உயர்நிலைப் பள்ளி துவக்குதல்.

13—வினா எண் 17153—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் ஒன்றியம், திருவாஞ்சியத்தில் உயர்நிலைப் பள்ளி தொடங்க அரசுக்கு வேண்டுகோள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மணக்கால் அய்யம்பேட்டையில் உயர்நிலைப் பள்ளி துவக்குதல்.

14—வினா எண் 17154—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் மணக்கால் அய்யம்பேட்டையில் உயர்நிலைப் பள்ளி தொடங்க அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1984 அக்டோபர் 15]

சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மேலும் மாடிப் பேருந்துகள் விடல்.

15—வினா எண் 17213—திரு. து. புருஷோத்தமன் : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மேலும் மாடி பஸ்களை விடும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

பல்லவன் பேருந்தில் பயணச் சீட்டு வழங்க தானியங்கி இயந்திரம் பொருத்தும் திட்டம்.

16—வினா எண் 17216—திரு. து. புருஷோத்தமன் : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லவன் பேருந்தில் பயணிகள் காசைப் போட்டு பயணச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தானியங்கி இயந்திரம் பொருத்தும் யோசனை உள்ளதா ?

விடை—

இல்லை.

தமிழ்நாட்டுப் பாட நூல் வெளியீட்டு நிறுவனம் மூலம் வெளியிடும் நூல்கள்.

17—வினா எண் 17218—திரு. து. புருஷோத்தமன் : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டுப் பாட நூல் வெளியீட்டு நிறுவனத்தில் சில நூல்கள் பற்றாக் குறையாகவும், வேறு சில நூல்கள் ஏராளமாக அச்சிடப்பட்டு விற்பனையாகாமல் முடங்கிக் கிடப்பதும் உண்மையா ?

விடை—

இல்லை.

[1984 அக்டோபர் 15

தஞ்சை நகராட்சியில் நீச்சல் குளம் அமைக்கும் திட்டம்.

18—வினா எண் 17244—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை நகராட்சியில் நீச்சல் குளம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விக்கு இடமில்லை.

திருவாடானைத் தாலுக்காவில் நூற்பாலை ஏற்படுத்துதல்.

19—வினா எண் 17255—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானைத் தாலுகாவில் நூற்பாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

செங்கை நகரில் அனைத்து வசதிகளுடன் விளையாட்டு மைதானம் அமைத்தல்.

20—வினா எண் 17275—திரு. சி. கணேசன் மற்றும் திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை நகரில் விளையாட்டு மைதானம் அனைத்து வசதிகளுடன் அமைத்துத் தர அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கை எந்நிலையிலுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



1984 அக்டோபர் 15]

வெளிநாடுகளில் தமிழைப் பயிலும் வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் மூலம் ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து வெளியிடும் திட்டம்.

21—வினா எண் 17313—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தமிழ்மொழியை பயிலும் வண்ணம் தமிழ்ப் பல்கலைக் கழகம் மூலம் ஒலிப்பதிவு நாடாவில் (Tape cassette) பதிவு செய்து வெளியிடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஒலிப்பதிவும், ஒளிப்பதிவும் செய்யும் திட்டமிருக்கிறது. மாதிரி ஒளிப்பதிவு நாடா ஒன்றைத் தயாரிக்க எல்லா முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. விரைவில் இதன் மாதிரி வடிவம் ஒன்று உருவாகும். காட்சிப் பெட்டிகள் பலரிடம் இருப்பதால் ஒளிப்பதிவு செய்தால் மிக உதவியாக இருக்கும் என்ற கருத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்றுள்ளது. பின்னர் என்னென்ன பொருளில் ஒளிப்பதிவு/ஒலிப்பதிவு நாடாக்கள் தயாராக இருக்கின்றன என்று வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்தப்படும்.

செங்கல்பட்டு நகருக்கு பேருந்து நிலையம் கட்டித்தரும் செயற்குறிப்பு.

22—வினா 17334—திரு. சி. கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு நகருக்கு பேருந்து நிலையம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : செங்கற்பட்டு நகராட்சியில் 1.88 ஏக்கர் நிலத்தில் பேருந்து நிலையம் கட்ட ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 15.30 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

[1984 அக்டோபர் 15

## இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கண்மாய்களை அபிவிருத்தி செய்தல்.

23—வினா எண் 17380—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 7,300 கண்மாய்களில் ஐந்நூறு ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டு உள்ள கண்மாய்கள் எத்தனை ?

(ஆ) கண்மாய்களை அபிவிருத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 7,300 கண்மாய்களில் ஐந்நூறு ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டு உள்ள கண்மாய்கள் 86 உள்ளன.

(ஆ) கண்மாய்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணிகள் துரித சிறு சிறுபாசன திட்டம் மற்றும் பராமரிப்பு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், முன்னாள் ஜமீன் ஏரிகளின் அபிவிருத்திப் பணிகள் அதன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

வினா எண் 17401—நீக்கப்பெற்றது.

## புலியூர் சாலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு.

24—வினா எண் 17403—திரு. டி. மணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தாலூகா புலியூர் சாலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.



1984 அக்டோபர் 15]

## மொரப்பூர் ஜங்ஷன் இருப்புப் பாதையில் மேம்பாலம் கட்டும் திட்டம்.

25—வினா எண் 17415—திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி - அரூர் நெடுஞ்சாலையில் மொரப்பூர் ஜங்ஷன் இருப்புப் பாதையில் ஒரு மேம்பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## பி. எச். டி. பட்டம் பெற்ற அரசு கலைக் கல்லூரி ஆசிரியர்கட்கு அளிக்கப்பட்டு வந்த ஊக்க ஊதியத் தொகை.

26—வினா எண் 17442—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி. எச். டி. (Ph.D.) பட்டம் பெற்ற அரசு கலைக் கல்லூரி ஆசிரியர்கட்குக் கொடுக்கப்பட்டு வந்த ஊக்க ஊதியத் தொகை நிறுத்தப்பட்டு இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது மீண்டும் கொடுக்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை ; 4—9—79-க்கு முன் டாக்டர் படி பெற்று வந்த கல்லூரி ஆசிரியர்கள், படியைத் தொடர்ந்து பெற்று வருகின்றனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1984 அக்டோபர் 15

நொய்யல் ஆற்றுப் படுகையில் பூண்டி நீர்த்தேக்கத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள்.

27—வினா எண் 17480—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் நொய்யல் ஆற்றுப் படுகையில் பூண்டி நீர்த் தேக்கத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

(ஆ) இத்திட்டத்தினால் பயன் பெறும் நிலத்தின் அளவு என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆம். இத்திட்டத்தினால் 10,360 ஏக்கர் நிலங்களுக்கு உறுதிப் பாசனமும் 1,230 ஏக்கர் இடைவெளி நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும்.

கோவை மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை.

28—வினா எண் 17481—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட கணபதி, இரத்தினபுரி ஆகிய பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆசிரியர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) தேவையான கட்டிட வசதி உள்ளதா ?

விடை—

| | | |
|---|---|---|
| (அ) மாணவர்கள் எண்ணிக்கை .. | .. | 2,703 |
| ஆசிரியர்கள் எண்ணிக்கை .. | .. | 63 |

(ஆ) தேவையான இட வசதியைப் பெருக்க, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கோவை மாநகராட்சிப் பகுதியிலுள்ள ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகள்.

29—வினா எண் 17482—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சி பகுதியில் உள்ள மொத்த ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகள் எவ்வளவு ?

(ஆ) கடந்த ஐந்து ஆண்டுகளில் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு உயர்ந்து உள்ளது ?

(இ) இட நெருக்கடியை தவிர்க்க மாநகராட்சி எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?



1984 அக்டோபர் 15]

விடை—

| | | | |
|---|---|---|---|
| (அ) ஆரம்பப் பள்ளிகள் .. | .. | .. | 60 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | .. | 8 |
| (ஆ) ஆரம்பப் பள்ளிகள் | .. | .. | .. |
| உயர்தர ஆரம்பப் பள்ளிகள் | .. | .. | .. |
| நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளிகள் | | | 42 சதவீதம் |
| மேல் நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 28 சதவீதம் |
| செவிடு ஊமைப் பள்ளி | .. | .. | 10 சதவீதம் |

(இ) இடவசதியைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தனியாருக்கு வழங்கும் புதிய பேருந்து வழித் தடங்கள்.

30—வினா எண் 17491—திரு. சி. கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய பேருந்து வழித்தடங்களை தனியாருக்கு வழங்குவதை அரசு நிறுத்தி வைத்து இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனை தளர்த்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தோல் பதனிடும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் செயற் குறிப்பு.

31—வினா எண் 17499—திரு. சி. கணேசன் : மாண்புமிகு ஊரகத் தொழில அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தோல் பதனிடும் கூட்டுறவு சங்கங்களை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

**ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதல் நடமாடும் மருத்துவ ஊர்தி வழங்கும் திட்டம்.**

*32—வினா எண் 17502*—திரு. சி. கணேசன் : மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதலாக நடமாடும் மருத்துவ ஊர்தி வழங்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது வழங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**உள்நாட்டு மீனவப் பெண்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.**

*33—வினா எ்ண் 17510*—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்நாட்டு மீனவப் பெண்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தூத்தூரில் ஒரு சிறிய மீனபிடித் துறைமுகம் நிறுவும் செயற்குறிப்பு.**

*34—வினா எண் 17529*—திரு. டி. மணி: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூரில் ஒரு சிறிய மீன் பிடி துறைமுகம் நிறுவும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

(இ) எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் ?





விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : வினா எழவில்லை.

**திருப்பத்தூர் மருத்துவமனையில் சித்த வைத்தியப் பிரிவு ஆரம்பித்தல்.**

*35—வினா எண் 17606*—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசாங்க மருத்துவமனையில் சித்த வைத்தியப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தற்போது செயல்படுகிறதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1978 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

**கவசம்பட்டியிலிருந்து ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு சாலை அமைத்தல்.**

*36—வினா எண் 17613*—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் சர்க்கரை ஆலை, சாலை அமைக்கும் திட்டத்தின் கீழ் கவசம்பட்டியிலிருந்து ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு சாலை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

(இ) உத்தேச மதிப்பீடு என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை.

**பாலாறு—வேகவதி ஆறுகளை இணைக்கும் கோரிக்கை.**

*37—வினா எண் 17689*—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பாலாறு-வேகவதி ஆறுகளை இணைக்க வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் தொழில் நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பயன் தராது என்று கருதப்பட்டதால் கைவிடப்பட்டது என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்ளார்.

**எரையானூர் கிராம பெரிய ஏரி மற்றும் சித்தேரியை ஆழப்படுத்தும் திட்டம்.**

38—வினா எண் 17717—திரு. கே.எம். தங்கமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், எரையானூர் கிராம பெரிய ஏரி மற்றும் சித்தேரியை ஆழப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இப்பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன.

**வேடசந்தூர் தாலுக்காவில் சிப்காட் தொழில் மையம் அமைத்தல்.**

39—வினா எண் 17753—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுக்காவில் "சிப்காட்" தொழில் மையம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திருப்பத்தூரில் நகராட்சி மூலம் திரை அரங்கம் கட்டும் செயற்குறிப்பு.**

40—வினா எண் 17775—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் நகராட்சியின் மூலம் திரை அரங்கம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உளளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?





விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**துவரங்குறிச்சி சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவு ஏற்படுத்துதல்.**

41—வினா எண் 17821—திரு. மே.அ. இராசகுமார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் உள்ள சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது.

**கடலோரப் பகுதிகளிலுள்ள மின் கம்பிகள் உப்புக்காற்றால் பழுதாவதைத் தடுக்கும் பணி.**

42—வினா எண் 17894—திரு. சி. கணேசன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலே கடலோரப் பகுதிகளில் மின்கம்பிகள் உப்புக் காற்றால் பழுதாவதைத் தடுக்க அரசிடம் ஏதேனும் மாற்று ஏற்பாடு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) தமிழகத்தில் கடலோரப் பகுதிகளில் மின் கம்பிகள் உப்புக் காற்றால் பழுதடைவதில்லை. ஏனென்றால் அங்குள்ள மின் கம்பித் தொடர்கள் அலுமினியத்திலானவை. உப்புக் காற்று அலுமினியத்தைப் பாதிப்பதில்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

[1984 அக்டோபர் 15

தாளவாடியில் மண்வளப் பாதுகாப்புத் துணைக் கோட்டம் ஏற்படுத்துதல்

43—வினா எண் 17931—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்பு துணைக் கோட்டம் ஒன்று தாளவாடியில் செயல்பட அரசு ஆவண செய்யுமா ?

விடை —

தாளவாடியில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், துணைக்கோட்டம் ஒன்று செயல்பட தற்போது அவசியம் இல்லை எனக்கருதி செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

தகட்டூர் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்தல்.

44—வினா எண் 17945—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் தகட்டூர் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விடுதி எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

துவரங்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு.

45—வினா எண் 17971—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயற்படுத்தப்படும் ?



1984 அக்டோபர் 15]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மணப்பாறை—சென்னைக்கு விரைவுப் பேருந்து விடல்

46—வினா 17995—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —.

(அ) மணப்பாறையிலிருந்து—சென்னைக்கு குளித்தலை, முசிறி, பெரம்பலூர் வழியாக விரைவு பேருந்து விடவேண்டும் என்ற கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னையில் மகளிருக்காக நவீன உடற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

47—வினா 18036—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் மகளிருக்கென நவீன உடற்பயிற்சி நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை —

இல்லை.

புத்தூர் அருகில் கோரையாறு, தேவியாறு ஆகியவற்றின் குறுக்கே பாலங்கள் கட்டுதல்.

48—வினா 18062—திரு. ரா, கிருஷ்ணன் : மாண்புமிகு சத்துணவு திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசபாளையம் வட்டம், புத்தூர் கிராமம் அருகில் ஓடும் கோரையாறு, தேவியாறு ஆகியவற்றின் குறுக்கே பாலங்கள் கட்டப்பட வேண்டுமென அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புத்தூர்—நல்லமங்கலம் சாலையில் கி. மீ. 2/6-ல் கோரையாற்றின் குறுக்கே குழாய்ப்பாலம் அமைக்கவும், கி.மீ. 3/6-ல் தேவியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டவும் மொத்தம் ரூபாய் 28.00 இலட்சம் தேவைப்படும். அரசின் குறுகிய நிதி வசதியின் காரணமாக இப்பணிகளை உடனடியாக மேற்கொள்ள இயலாது. எனினும் வரும் ஆண்டுகளில் தயாரிக்கப்படவிருக்கும் திட்டகால வேலைகளின் பட்டியலில் நிதி வளம் வேலையின் முக்கியத்துவம் ஆகியவைகளை கருத்திற்கொண்டு சேர்க்கப் பரிசீலனை செய்யப்படும்.

**மயிலாடுதுறை மருத்துவமனையில் தனி எலும்பு முறிவுப் பிரிவு துவக்கும் செயற்குறிப்பு.**

49—வினா 18084—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை வட்ட மருத்துவமனையில் தனியாக எலும்பு முறிவுப் பிரிவு துவக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மயிலாடுதுறை—திருவாரூர் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம்.**

50—வினா 18085—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு சத்துணவு திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் சாலையில், மயிலாடுதுறை நகர எல்லையில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



**நகர பஞ்சாயத்துக்களின் தன்னிறைவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம்.**

51—வினா 18110—திரு. சி. கணேசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர பஞ்சாயத்துக்களின் தன்னிறைவுத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட பணம் குடிநீர் திட்டத்துக்காக செலவழிக்கப்பட வேண்டும் என்ற மாற்றுத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

இல்லை.

**தர்மபுரி—சென்னைக்கு இரவு நேர சொகுசுப் பேருந்து விடும் செயற்குறிப்பு.**

52—வினா 18151—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியிலிருந்து சென்னைக்கு இரவுநேர சொகுசுப் பேருந்து (Super Deluxe) விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**தனியார் துறையில் பாலிடெக்னிக் நடத்த அரசு நிதியுதவி அளிக்கும் செயற்குறிப்பு.**

53—வினா 18157—டாக்டர். கே. சமரசம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறையில் பாலிடெக்னிக் நடத்த அரசு நிதி உதவி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): தனியார் துறையில் பாலிடெக்னிக் துவக்கி நடத்த அரசு நிதி உதவி அளிக்கும் திட்டம் 1981-82 வரையில் நடைமுறையில் இருந்தது. 1982-83 முதல் அரசு நிதி உதவி சிறிதும் எதிர் நோக்காமல் தாமே முழுமையாகச் செலவு செய்து சில நிபந்தனைகளுக்குட்பட்டு பாலிடெக்னிக்கினை தொடங்கி நடத்த முன் வரும் தனியார் நிருவாகங்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

[1984 அக்டோபர் 15

கைவினைப் பொருட்களின் அருங்காட்சியகங்கள் அமைக்கும் செயற் குறிப்பு.

54—வினா 18213—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைவினைப் பொருட்களின் அருங்காட்சியகங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

கைத்தறித் துணிகளின் நிரந்தர பொருட்காட்சி அமைக்கும் செயற் குறிப்பு.

55—வினா 18213-ஏ—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வணிகவரி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துணிகளின் நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

முதியோர் கல்வித் திட்டத்தை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு.

56—வினா 18214—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ' முதியோர் கல்வித் திட்டத்தை ' மாற்றி அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த வகையில் மாற்றம் செய்யப்படவுள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.



1984 அக்டோபர் 15]

வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்கு தனிக் கார்டு மூலம் மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்கும் திட்டம்.

57—வினா 18232—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வறுமைகோட்டிற்கு கீழே வாழக்கூடியவர்களுக்கு தனியாக கார்டு வழங்கி உணவுப் பொருள் மலிவு விலையில் கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

அறுபது வயதிற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்.

58—வினா 18241—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அறுபது வயதிற்கு மேற்பட்ட விவசாய தொழிலாளர்கள் அனைவருக்கும் பென்சன் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் துவங்கப்பட உள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

*Details of United Kingdom Foundation backing Tamil Nadu Eye Camps*

59—Q. 18258—THIRU P. VENKATASUBRAMANIAM : Will the Hon. Minister for Health be pleased to state—

(a) Whether any United Kingdom Foundation is backing Tamil Nadu Eye Camps? and

(b) If so, the details there of ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

காஞ்சிபுரம் பகுதியில் அரசு பொதுநிறுவனங்கள் சார்பில் தொழிற் சாலைகள் அமைத்தல்.

60—வினா 18260—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சிபுரம் பகுதியில் அரசு பொது நிறுவனங்களின் சார்பில் தொழிற்சாலைகள் அமைக்க வேண்டி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

ஐயன்பேட்டை அறிஞர் அண்ணா உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

61—வினா 18261—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கற்பட்டு மாவட்ட ஐயன்பேட்டை அறிஞர் அண்ணா உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த வேண்டுமென பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை?



காஞ்சிபுரம் பகுதியை தொழில் ரீதியில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்.

62—வினா 18270—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சிபுரம் பகுதியை தொழில் ரீதியில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

சேலம் மாவட்டத்தில் பூமிக்கடியில் கண்டுபிடிக்கப்பட்ட வற்றாத நதி.

63—வினா 18302—திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டத்தில் பூமிக்கடியில் வற்றாத நதி இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அதை பயன்படுத்த அரசு திட்டம் வைத்துள்ளதா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இந்த கேள்விக்கு இடமில்லை.

சிதம்பரத்தில் தொழில் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம்.

64—வினா 18304—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தில் தொழில் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**சென்னை-வத்தலக்குண்டு சொகுசு பேருந்து விடல்.**

*65—வினா 18359*—திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள் : *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை-வத்தலக்குண்டுக்கு திண்டுக்கல், காந்தி கிராமம், ஐம்புதுரைக்கோட்டை, நிலக்கோட்டை வழியாக சொகுசு பஸ் விடும் உத்தேசம் உண்டா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?*

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**விஷ்ணுபுரம் ஜார்ஜ் உயர்நிலைப்பள்ளியை மேல் நிலைப்பள்ளியாக மாற்றல்.**

*66—வினா 18372*—திரு. இரெ. இராசமாணிக்கம் : *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

*(அ) நன்னிலம் வட்டம், விஷ்ணுபுரம் ஜார்ஜ் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப்பள்ளியாக மாற்றக்கோரி அரசிற்கு விண்ணப்பமேதும் வந்துள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?*

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

**திருவிடைமருதூர், திருப்புவனம் பேரூராட்சிகளை இணைத்தல்.**

*67—வினா 18380*—திரு. செ. இராமலிங்கம் : *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

*(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் பேரூராட்சி திருபுவனம் பேரூராட்சி இரண்டையும் இணைத்து திருவிடைமருதூர் நகராட்சியாக மாற்றி அமைக்கப்படுமா ?*

*(ஆ) வருவாயும், மக்கள் தொகையும் தேவையான அளவு அமைந்திருப்பதால் உடன் ஆணை பிறப்பிக்கப்படுமா ?*



விடை—

(அ) இல்லை.

(ஆ) திருவிடைமருதூர் மற்றும் திருப்புவனம் ஆகிய இரண்டு பேரூராட்சிகளின் வருமானம் போதிய அளவு இல்லாததால் அவைகளை நகராட்சியாக மாற்ற இயலாது.

**கும்பகோணத்திலிருந்து பந்தநல்லூர் வரை நகரப் பேருந்து விடல்.**

*68—வினா 18391*—திரு. செ. இராமலிங்கம் : *மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

*(அ) கும்பகோணத்திலிருந்து திருவிடைமருதூர் (தாலுகா தலைநகர்), சூரியனார் கோயில், கதிராமங்கலம் வழியாக பந்தநல்லூர் வரை நகரப்பேருந்து விட ஆணை பிறப்பிக்கப்படுமா ?*

*(ஆ) ஆம் எனில் எப்போது முதல் விடப்படும் ?*

விடை—

*(அ) மற்றும் (ஆ) கும்பகோணத்திலிருந்து திருவிடைமருதூர், சூரியனார்கோயில், கதிராமங்கலம் வழியாக பந்தநல்லூர் வரை உள்ள வழித்தடத்தின் தூரம் 33 கிலோமீட்டராக இருப்பதால் இந்த வழித்தடத்தில் நகரப்பேருந்து விட இயலாது.*

**மதுரை—திருச்சி வரை சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துவிடல்.**

*69—வினா 18398*—திரு. இரா. அருணகிரி : *மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*மதுரையிலிருந்து திருச்சி வரை சிங்கம்புணரி வழியாக சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடப்படுமா?*

விடை—

*சாத்தியக்கூறு இல்லை.*

**பெரியாறு நீர்மின் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி இயந்திரங்கள்.**

*70—வினா 18419*—திரு. வே. இரா. ஜெயராமன் : *மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

*(அ) பெரியாறு நீர்மின் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி இயந்திரங்கள் அடிக்கடி பழுதடைந்து உற்பத்தி பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை —

(அ) இயந்திரங்கள் அடிக்கடி பழுதடையவில்லை. மின் உற்பத்தியும் பாதிக்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தேனியில் மின் உப நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு.

71 — வினா 18420 — திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

தேனியில் 230 K.V.A. மின் உப நிலையம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை —

இல்லை.

தேனியில் வழிப்போக்கு ஓய்விடம் அமைக்கும் செயற்குறிப்பு.

72 — வினா 18423 — திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

தேனியில் வழிப்போக்கு ஓய்விடம் ( Motel ) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை —

தற்சமயம் இல்லை.

சேலத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகம் மூலம் நட்சத்திர ஓட்டல் கட்டும் செயற்குறிப்பு.

73 — வினா 18471 — திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

சேலத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகம் மூலம் நட்சத்திர ஹோட்டல் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை —

இல்லை.





சங்கரன்கோவில் நகரில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை நிறுவும் செயற்குறிப்பு.

74 — வினா 18488 — திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகரில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மதுரை கோட்ஸ் மில்லுக்குச் செல்லும் தாம்பரபரணியில் கட்டப்பட்ட இரும்பு பாலத்தைப் புதுப்பிக்கும் திட்டம்.

75 — வினா 18505 — திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருநெல்வேலி மாவட்டம் மதுரை கோட்ஸ் மில்லுக்கு செல்லும் தாம்பரபரணியில் கட்டப்பட்ட இரும்புபாலத்தை புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை —

இல்லை.

ஆலம்சோலை ஆறுகாணி சாலையை பராமரிக்கும் பணி.

76 — வினா 18525 — திரு. டி. மணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குமரி மாவட்டம் ஆலம்சோலை — ஆறுகாணி சாலையை பராமரிக்கும் வேலை எப்போது துவக்கப்படும்?

(ஆ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

விடை —

(அ) 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பணி ஏற்கெனவே துவக்கப்பட்டு விட்டது.

(ஆ) மொத்த மதிப்பீடு ரூ. 5 லட்சங்கள்.

திருக்கழுக்குன்றத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் கோரிக்கை.

77—வினா 18578—திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டத்திலுள்ள பின் தங்கிய பகுதியான திருக்கழுக்குன்றத்தில் தொழிற்பேட்டை அமைக்க பொது மக்களிடமிருந்து கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் தொழிற்பேட்டை அமைக்க கோரிக்கை ஏதும் வரவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

ஈரோடு நகராட்சியோடு ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளை இணைக்கும் திட்டம்.

78—வினா 18604—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சியோடு ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளை இணைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஊராட்சி, பேரூராட்சிகளின் பகுதிகள் இணைக்கப்படும் ?

விடை—

(அ) அரசின் பரிசீலனையில் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

விளாத்துறையில் இறவை நீர்ப்பாசனம் செயல்படுத்தும் திட்டம்.

79—வினா 18615—திரு. டி. மணி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்துறையில் இறவை நீர்ப்பாசனம் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்பட ஆரம்பிக்கும்?





விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கீழராஜகுலராமன் கிராமத்தருகில் பருத்தி ஆராய்ச்சி கேந்திர நிலையம் அமைத்தல்.

80—வினா 18624—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி கீழராஜகுலராமன் கிராமத்தருகில் ஒரு பருத்தி ஆராய்ச்சி கேந்திர நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திருச்சியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்புக்கள்.

81—வினா 18632—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலும் அதனை சுற்றிய பகுதிகளிலும் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான இடத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்புகள் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(இ) ஆக்கிரமிப்பாளர்களின் பட்டியல் வெளியிடப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) மற்ற இடங்களைப் போலவே திருச்சிராப்பள்ளியிலும் எப்போதெல்லாம் ஆக்கிரமிப்புகள் பற்றிய தகவல்கள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறைக்கு கிடைக்கின்றனவோ அல்லது அத்துறை அதிகாரிகளால் ஆக்கிரமிப்புகள் கண்டு பிடிக்கப்படுகின்றனவோ, அவ்வப்போது அவைகளை நீக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(இ) அவ்வப்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதால், பட்டியல் ஏதும் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்படவில்லை.

[1984 அக்டோபர் 15

நாட்டரம்பள்ளி பகுதியில் தொழில் இணையகம் ஏற்படுத்தும் திட்டம்.

82—வினா 18668—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் நாட்டரம்பள்ளி பகுதியில் தொழில் இணையகம் (Industrial Complex) ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

மலைவாழ் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின் கீழ் முள்ளுக்குறிச்சி முதல் புங்கம்பட்டி வரை புதிய சாலை அமைத்தல்.

83—வினா 18696—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மேம்பாட்டுத் துணைத்திட்டத்தின்கீழ் முள்ளுக்குறிச்சி முதல் புங்கம்பட்டி வரை (25 கிலோ மீட்டர்) புதிய சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

சேந்தமங்கலம் தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்கென கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தும் திட்டம்.

84—வினா 18715—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் தொகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கென கூட்டுறவு நூற்பாலை ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கிடமில்லை.



1984 அக்டோபர் 15]

ஈரோட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கென வடிவமைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு.

85—வினா 19071—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு வணிக வரி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் ஈரோட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கென வடிவமைப்பு நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

விரைவுப் பேருந்துகளில் டேப்ரெக்கார்டர்கள் மூலம் திருக்குறள் பற்றிய சொற்பொழிவுகளை ஒலிபரப்புதல்.

86—வினா 19085—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விரைவுப் பேருந்துகளில் இருக்கும் "டேப்ரெக்கார்டர்கள்" மூலம் திருக்குறள் பற்றிய அறிஞர்களின் சொற்பொழிவை ஒலிபரப்ப அரசு வகை செய்யுமா?

விடை—

சாத்தியக்கூறு இல்லை.

வெம்பக்கோட்டை, சிவகாசி ஒன்றியங்களில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்ட வேலைகள் தொடங்கல்.

87—வினா 19158—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியம் இராமுத்தேவன்பட்டி கிராமப் பகுதியிலும், சிவகாசி ஒன்றியம் மாரனேரி கிராமப் பகுதியிலும் (D. P. A. P. Schemes) வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்ட வேலைகள் நடைபெறவில்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) 1983-84 ஆம் ஆண்டிலாவது அந்த வேலைகளை செய்ய அரசு முன்வருமா?

விடை—

அவை முன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

*557, 577-578 பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1984 அக்டோபர் 15

**திருவெறும்பூர் பகுதிக்கு உலக வங்கி நிதி உதவியுடன் காவேரி குடிநீர் விநியோகம் செய்யும் திட்டம்.**

88—வினா 19237—திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதியைச் சேர்ந்த பொன் மலை நகராட்சிக்கும் ஆலத்தூர் பேரூராட்சிக்கும் உலக வங்கி நிதியுதவியுடன் காவிரியிலிருந்து குடிநீர் கொண்டு சென்று விநியோகம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க பெற்றோர்களின் வருட வருமானத்தை மாற்றல்.**

89—வினா 19334——திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க பெற்றோர்களின் வருட வருமானத்தை ரூ. 9,000-லிருந்து ரூ. 12,000-க்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

விடை —

இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு பள்ளி இறுதி வகுப்புக்கு மேல் உள்ள படிப்புகளுக்கு மத்திய அரசு கல்வி உதவித் தொகை பெற பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு ரூ. 9,000-லிருந்து ரூ. 12,000-க்கு ஏற்கனவே உயர்த்தப்பட்டுள்ளது. இந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கும், ஆதிதிராவிட கிறிஸ்துவ மாணவர்களுக்கும் மாநில அரசு உதவித் தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெற, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 3,000-லிருந்து ரூ. 6,000-க்கு 1981–82 கல்வி ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இதை மேலும் மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.



1984 அக்டோபர் 15]

**முகையூர் தொகுதியில் தொழில் நுட்பக் கல்லூரி திறக்கும் திட்டம்**

90 வினா 19340—திரு. ஆர். சுந்தரமூர்த்தி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் முகையூர் சட்ட மன்றத் தொகுதியில் தொழில் நுட்பக் கல்லூரி திறக்க அரசிடம் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும்?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**காஞ்சிபுரம்—சென்னை சிறிய இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றுதல்.**

91—வினா 19366—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம்—சென்னை மீட்டர் கேஜ் இரயில் பாதையை பிராட்கேஜாக மாற்றி அமைக்க மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**சோழன் போக்குவரத்துக் கழக தலைமையிடத்தை தஞ்சாவூருக்கு மாற்றும் திட்டம்.**

92—வினா 19403—திரு. எம். சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தை தஞ்சாவூருக்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசின் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படும்?

விடை —

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1984 அக்டோபர் 15

செஞ்சிப் பகுதியில் தொழிற்பேட்டை உருவாக்கும் திட்டம்.

*93*—வினா *19597*—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சிப் பகுதியில் தொழிற்பேட்டை உருவாக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும். ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

ஆதி திராவிடர் நலப்பள்ளிகளை கல்வித் துறையோடு இணைக்கும் செயற்குறிப்பு.

*94*—வினா *19871*—திரு. என். பழனிவேல், திரு. எம். ஆறுமுகம், திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளை, கல்வித்துறையோடு இணைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இணைக்கப்படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

பாண்டியம்பாளையம் ஊராட்சியில் கால்நடை கிளை மருந்தகம் ஆரம்பிக்கும் திட்டம்.

*95*—வினா *19933*—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை ஒன்றியம், பாண்டியம்பாளையம் ஊராட்சியில் கால்நடை கிளை மருந்தகம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில்,, எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.



984 அக்டோபர் 15]

சேலம் மாவட்டத்தில் எலிகளை ஒழிக்கும் திட்டத்தை தீவிரப்படுத்தும் செயற்குறிப்பு.

*96*—வினா *19970*—திரு. இ. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் விவசாயத்திற்கு தொல்லை தரும் எலிகளை ஒழிக்கும் திட்டத்தை தீவிரப்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

வேடசந்தூர் தாலுக்காவில் வேளாண்மை விளைபொருள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு.

*97*—வினா *20427*—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தாலுக்காவில் வேளாண்மை விளைபொருள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

மதுராந்தகம் தாலுக்காவில் சர்க்கரைத் தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.

*98*—வினா *20458*—திரு. சி. கணேசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் தாலுக்காவில் சர்க்கரைத் தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம் (Institute of Sugar Technology) ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

[1984 அக்டோபர் 15

சிறப்பு சிறுபாசன திட்டத்தின் கீழ் குட்டைகளை மேம்படுத்தும் திட்டம்.

99—வினா 20554—திரு. சி. கணேசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறப்பு சிறுபாசன திட்டத்தின்கீழ் குட்டைகளை மேம்படுத்தும் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டு இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் பரிசீலனையில் எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

அரசு ஆரம்பப்பள்ளிகளில் பணிபுரியும் இரண்டாம் நிலை உருது முன்ஷிகளை முதல் நிலை உருது முன்ஷியாக உயர்த்தும் செயற்குறிப்பு.

100—வினா 2505—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் அரபிக் முன்ஷிகளை (Arabic Munshi I Grade) அரபிக் முன்ஷிகளாக்கும் தீர்மானம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் அவர்களுக்கு I Grad கொடுக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): அரசு ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் இரண்டாம் நிலை அரபிக் முன்ஷிகள் முதல் நிலை பெறுவதற்கு அரசு ஏற்கனவே ஆணைகள் வெளியிட்டுள்ளது. அவ்வாணைகளின்படி முதல் நிலைக்குத் தேவையான முழுத் தகுதிகள் பெற்ற நாளிலிருந்து முதல் நிலை அளிக்கப்படுகிறது. தவிர, பொதுக் கல்வித் தகுதியில்லாமல் இரண்டாம் நிலையில் 10 வருட பணிக் காலம் முடித்த பண்டிதர்களுக்கும் (முன்ஷிகளுக்கும்) முதல் நிலை அளிக்கப்படுகிறது. போதுமான பொதுக் கல்வித் தகுதியும் பயிற்சியும் இல்லையென்றாலும் இரண்டாம் நிலையில் 15 ஆண்டு காலம் முடித்திருப்பின் அவர்கட்கும் முதல் நிலை அளிக்கப்படுகிறது.



1984 அக்டோபர் 15]

வேப்பூர் ஒன்றியம் ஆய்க்குடி அகூர் பகுதியில் நீர்ப்பாசன ஏரி அமைக்கும் திட்டம்.

101—வினா 5068—திரு என். பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பூர் ஒன்றியத்தில் ஆய்க்குடி அகூர் பகுதியில் நீர்ப்பாசன ஏரி அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தை ரூ. 18.50 லட்ச மதிப்பீட்டில் நிறைவேற்ற அரசு ஜூன், 1982-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

பிளஸ் 2 மாணவர்களின் தொழிற் கல்வி பாடத் தேர்வு

102—வினா 5854—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிளஸ் 2 மாணவர்களின் தொழிற் கல்வி பாடத் தேர்வில் பேப்பர் 1, பேப்பர் 2 என சான்றிதழ் வழங்கப்படுவதால் தொழிற் கல்வியில் என்ன பாடத்தில் தேர்வு பெற்றார் என கண்டுபிடிப்பதில் கஷ்டமேற்படுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்தக்கஷ்டத்தை போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஏப்ரல் 1982 மேல்நிலைத் தேர்விலிருந்து விவரங்கள் தனித்தனியாக கொடுக்கப்படுகின்றன.

திருவாடனையில் ஏற்கனவே இருந்த கைத்தறி விற்பனை நிலையம் மீண்டும் திறக்க நடவடிக்கை.

103—வினா 8442—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு வணிகவரி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாடனையில் ஏற்கனவே இருந்த கைத்தறி விற்பனை நிலையம் மீண்டும் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

[1984 அக்டோபர்

விடை—

(அ) மற்றும் (ஆ) திருவாடானையில் நிரந்தர கோ-ஆப் டெக்ஸ் விற்பனை நிலையம் அமைத்தால் அது இலாபகரமாக செயல்பட போதிய சாத்தியக்கூறுகள் இல்லாததால் நிரந்தர விற்பனை நிலையம் அமைக்க தற்போதைய நிலையில் சாத்தியக் கூறுகள் இல்லை.

பண்டிகைக் காலங்களில் மட்டும் விற்பனை நிலையம் செயல் பட்டு வருவதால் வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, மீண்டும் தற்காலிக விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

### விளாத்திகுளம் தொகுதி பனையூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

104—வினா 8519—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விளாத்திகுளம் சட்ட மன்ற தொகுதி குளத்தூர் சமீபம், பனையூர் கிராமத்திற்கு மேல்நிலைத்தொட்டி அமைத்து குடிநீர் கிடைக்க ஆவன செய்யப்படுமா ?

விடை—

பனையூர் மேல்நிலைத் தொட்டிக்குத் தண்ணீர் ஏற்றப் பட்டு குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

### திருநெல்வேலி மாவட்டம் இனாம் கோடாரங்குளம் கிராமத்தில் முடிவு பெற்ற சர்வே வேலைகள்.

105—வினா 8874—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம் இனாம் கோடாரங்குளம் கிராமம் சர்வே வேலைகள் முடிவு பெற்று பைனல் நோட்டிபிகேஷன் முடிந்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், நஞ்சை, புஞ்சை புறம்போக்கு நிலங்கள் எவ்வளவு ?



1984 அக்டோபர் 15]

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம் கி. என். 101-கோடாரங்குளம், சட்டம் 26/63-ன் கீழ்நில அளவை செய்யப்பட்டு 19—7—1983-ல் 9 (2) அறிக்கைகள் சார்வு செய் யப்பட்டுள்ளது. மேல் முறையீடு காலம் மூன்று மாதம் முடிந்த வுடன் 1-வது பிரிவு விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, அக்டோபர் 83-ன் இறுதிக்குள் நில அளவையையும் எல்லையையும் குறித்த சட்டம் பிரிவு 8, 1923-ன் கீழ் 13-வது விளம்பரம் செய்ய தயார் நிலையில் உள்ளது.

(ஆ) வருவாய்த் துறை கணக்குகளின்படி பசலி 1380:

| | | | |
|---|---|---|---|
| நன்செய் | .. | .. | 108.09.0 ஹெக்டேர் |
| புன்செய் | .. | .. | 49.68.0 ஹெக்டேர் |
| புறம்போக்கு | | .. | 10.22.0 ஹெக்டேர். |

நிலவரித் திட்டத்தின்படி :

| | | | |
|---|---|---|---|
| நன்செய் | .. | .. | 120.82.5 ஹெக்டேர். |
| புன்செய் | .. | .. | 54.82.5 ஹெக்டேர். |
| புறம்போக்கு | | .. | 41.22.5 ஹெக்டேர். |

### சித்தா ஆயுர்வேத மருந்து வைத்தியத்தை தீவிரப்படுத்துதல்.

106—வினா 10847—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சித்தா ஆயுர்வேத மருந்து வைத்தியத்தை தீவிரப் படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 210 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகள் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது. அவற்றில் 145 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு, பிரிவிற்குத்தேவையான படுக்கைகள், துணி வகைகள் மற்றும் மரச் சாமான்கள் வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தர்மபுரியில் அரசினர் மாவட்ட தலைமையிட மருத்துவ மனையில் 15 படுக்கைகள் கொண்ட சித்த வைத்திய சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இராமநாதபுரம், வேலூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் சித்த மருத்துவப் பிரிவிற்கான கட்டிட வேலைகள் முடிந்து

விட்டன. சிதம்பரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் சித்த மருத்துவப் பிரிவிற்கான கட்டிட வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. 1982-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள், ஈரோடு மாவட்ட தலைமையிட மருத்துவமனையில் 25 படுக்கைகள் கொண்ட சித்த வைத்தியப் பிரிவு திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 1983-84-ஆம் ஆண்டில் கடையநல்லூர் (திருநெல்வேலி மாவட்டம்) அரசினர் மருத்துவமனை, தூத்துக்குடி (திருநெல்வேலி மாவட்டம்) மற்றும் கடலூர் (தென்னாற்காடு மாவட்டம்) அரசினர் தலைமையிட மருத்துவமனைகளில் சித்த மருத்துவ புற நோயாளிகள் பகுதி மற்றும் 16 படுக்கைகள் கொண்ட பகுதி ரூ. 5.25 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது. பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 44-லிருந்து 75 ஆக 1980-81 முதல் அதிகப்படுத்தப் பட்டுள்ளது. இக்கல்லூரியுடன் 208 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவமனை இணைந்துள்ளது. சித்த மருத்துவ வளர்ச்சிக்காக, சுவடிகள் அச்சிடப்படாத கையேட்டுப் பிரதிகள், அச்சிடப்பட்ட அரிய நூல்கள் ஆகியவற்றைத் திரட்டவும் வாங்குவதற்காகவும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரிக்குத் தேவைக்கு சித்த பாட புத்தகங்கள் உட்படும் எல்லா சித்த மருத்துவ நூல்களை அச்சிடுவதற்காகவும், சித்த மருந்து தயாரிக்கும் நிறுவனைக் குறியிடு பற்றிய தகவலைத் திரட்டவும் வேண்டிய ஆராய்ச்சி செய்த பின்னர் சித்த மருந்துப் பொருட்கள் குறித்த நூல்களைத் தொகுக்கவும் அச்சிடப்பட்ட அரிய சித்த நூல்களை சித்த மருந்து கையேட்டுப் படிகள் ஆகியவற்றை அச்சிட்டு வெளியிடவும் 25 உறுப்பினர்கள் அடங்கிய சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழுவை அரசு மாற்றியமைத் துள்ளது. இக்குழுவின் பணிகள் மேற்கண்டவாறு வரையறுக்கப் பட்டிருந்தாலும், சித்த மருத்துவ வளர்ச்சிக்கான எல்லா ஆலோசனைகளையும் அவ்வப்போது இக்குழு அரசுக்கு வழங்கி வருகிறது.

சித்த மருந்துகள் சோதனைக் கூடம் நிறுவி அதில், மூலிகைகள் மருந்துச் சரக்குகள் முதலியவைகளின் தரத்தினை நிர்ணயம் செய்வதற்குத் தேவையான ஆலோசனை வழங்க 8 உறுப்பினர்கள் கொண்ட, "சித்த மருந்துகள் தர நிர்ணய ஆலோசனைக் குழு" என்ற குழுவினை அரசு அமைத்துள்ளது. மேலும் மூலிகைப் பண்ணைகளில் மூலிகைச் செடிகளை பயிரிட்டு அதனை பொருளாதார முன்னேற்றமடையும் வகையில் பராமரிப்பதற்கும் மூலிகைச் செடிகள் பயிரிடுவது மற்றும் மூலிகை சம்பந்தப்பட்ட உற்பத்திப்பொருள்களை சேகரிப்பதற்காக விரிவாக்கச் செயல் களை ஏற்படுத்துவதற்கும், உள்நாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்த பிறகு மூலிகைகளையும், மருந்துச்சரக்குகளையும் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்தல் போன்ற பணிகளை ஆற்றுவதற்கும் தமிழ்நாட்டில் தமிழ்நாடு மருந்துச் செடிகள் பண்ணை மற்றும்





மூலிகை மருந்துகள் கழகம் (Tamil Nadu M cic l Plant Forms and H rbol M dicinal Corporation) என்ற பெயர் கொண்ட தன்னுரிமையுள்ள கழகம் ஒன்றினை, 1956 நிறுவனங்களுக்கான சட்டத்தின் கீழ் பதிவு பெற்று ஆரம்பிப்பதற்கு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் 50 படுக்கை வசதிகள் உடைய ஆயுர்வேத உள் நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகள் சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 5 இடங்களில் அரசு ஆயுர்வேத மருந்தகங்கள் உள்ளன. உள்ளாட்சித் துறையின் பராமரிப்பில் மேலும் 93 ஆயுர்வேத மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆயுர்வேத மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்கு ஆயுர்வேத முறை மேம்பாட்டுக்குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கை இந்திய மருத்துவ இயக்குநரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஆயுர்வேத நூல்களை தமிழில் மொழி பெயர்க்க திரு. ராமதேசிகன் என்பவர் நியமிக்கப்பட்டு அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. போதிய ஆயுர்வேத மருத்துவர்கள் தமிழ் நாட்டில் இல்லாத காரணத்தால், தமிழ்நாட்டில் புதிதாக ஆயுர்வேத முறை மருந்தகங்கள் திறக்க இயலவில்லை. கோயம்புத்தூர், ஆரிய வைத்தியன், ராம்வாரியர் ஆயுர்வேத கல்லூரியிலும், சென்னை வெங்கட்டரமணன் ஆயுர் வேத கல்லூரியிலும் ஆயுர்வேதப் பட்டப்படிப்பு கற்பிக்கப்பட்டு வருகிறது. எனவே, எதிர்காலத்தில் போதிய ஆயுர்வேத மருத்துவர்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

தென்னாற்காடு மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் கட்டும் செயற் குறிப்பு.

107—வினா எண் 10973—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் விளையாட்டு அரங்குகள் கட்ட அரசு நிதி ஒதுக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) எத்தனை இடங்களில் கட்டப்படும்.

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : தென்னாற்காடு மாவட்டத்தில் 1. பண்ருட்டி, 2. விக்கிரவாண்டி, 3. கம்மாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் சிக்கன அரங்கம் கட்ட முதல் தவணையாக, ரூ. 17,500 ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கப் பட்டது. 2ஆவது தவணையாக ரூ. 17,500 சிக்கன அரங்கம்

கட்டும் பணி முன்னேற்ற அறிக்கை பெற்ற பிறகு வழங்கப்படும். இந்த நிதியுதவிக்கு மேலாகும் செலவினத்தை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் தனது நிதியிலிருந்து செலவிட வேண்டும்.

2. பண்ருட்டி சிக்கன விளையாட்டு அரங்கம் கட்டி முடிக்கப்பட்டது. விக்கிரவாண்டியில் முதல் கட்ட வேலை முடிவடைந்துள்ளது. கம்மாபுரத்தில் சிக்கன அரங்கம் கட்டுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் கரிசல் மண் வகையைச் சார்ந்தது என்றும் ஆகையினால் சிக்கன விளையாட்டு அரங்கம் கட்ட இயலாது எனத் தெரிவித்துள்ளதின்பேரில் இங்கு சிக்கன அரங்கம் கட்டுவதற்கு அனுமதி ரத்து செய்யப்பட்டது.

3. தென்னாற்காடு மாவட்டம், கடலூரில் விளையாட்டரங்கம் ஏற்கெனவே உள்ளது. இம்மாவட்ட சிறகு பந்துக் கழகம் அண்ணா விளையாட்டரங்கில் 100 அடி × 60 அடி அளவில் ஒரு உள் விளையாட்டரங்கம் அமைத்து அதில் இரண்டு சிறகு பந்து ஆடுகளமும் ஒரு கைப்பந்து ஆடுகளமும் ரூ. 7.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதாகவும் அதற்கு ரூ. 4.00 இலட்சம் அரசு மானியமாக வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது. எஞ்சியுள்ள ரூ. 3.00 இலட்சத்தினை தென்னாற்காடு மாவட்ட விளையாட்டு மன்ற பாட்மின்டன் கழகமும், கைப்பந்துக்கழகமும் ஏற்றுக்கொள்ள முன் வந்துள்ளது. இப்பொருள்பற்றி மாநில விளையாட்டு மன்ற நிதிக்குழு கூட்டத்தில் பரிசீலித்து தென்னாற்காடு மாவட்ட விளையாட்டு மன்றத்திற்கு உள் விளையாட்டரங்கம் கட்டுவதற்கு ரூ. 1.00 இலட்சம் தமிழ்நாடு மாநில விளையாட்டு மன்ற நிதியிலிருந்து வழங்க முடிவு செய்யப்பட்டு அதில் முதல் தவணை ரூ. 50,000-ம் கட்டிடம் அடிமட்டம் வந்தவுடன் 2-ஆவது தவணை ரூ. 50,000-ம் கட்டிடம், ஜன்னல் மட்டம் வரை கட்டி முடிக்கப்பட்டவுடன் வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. இது தவிர, விளையாட்டுத் திடல்களை மேம்படுத்துதலுக்கான மைய அரசுத்திட்டத்தின் கீழ் தென்னாற்காடு மாவட்ட அண்ணா விளையாட்டரங்கில் கைப்பந்து மற்றும் கூடைப்பந்து ஆடுகளத்திற்கு மின்னொளி அமைக்க முதல் தவணை மானியமாக மைய அரசு மானியம் ரூ. 9,585-ம் தமிழ்நாடு அரசு இணை மானியமாக ரூ. 9,585-ம் ஆக மொத்தம் ரூ. 19,170 வழங்கப்பட்டுள்ளது.

5. இது தவிர, கடலூர் அண்ணா விளையாட்டரங்கிலுள்ள மைதானங்களை பராமரிப்பதற்கான 1981–82இல் ரூ. 5,000-ம், 1982–83இல் ரூ. 3,000-ம், 1983–84இல் ரூ. 5,000-ம் வழங்கப்பட்டுள்ளது.



விளாத்திக்குளம் தாலுக்கா கீழ்நாட்டுக்குறிச்சி கண்மாயை ஆழப்படுத்தும் செயற் குறிப்பு

108—வினா எண் 11036—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தாலுக்கா கீழ்நாட்டுக்குறிச்சி கண்மாயை ஆழப்படுத்தவும், தூர்ந்துபோன கால்வாயை சீர் செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னை நகரில் ஆட்டோ ரிக்ஷா திருட்டுப் புகார் மீது நடவடிக்கை

109—வினா எண்—11500 திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமீப காலத்தில் சென்னை போலீசாரால் சென்னை நகரில் ஆட்டோ ரிக்ஷா திருடு பற்றிய புகார்கள் பெறப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரங்கள் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் வேலைக்கு உணவுத் திட்டத்தில் கீழ் அமைக்கப்பட்ட பணிகள்

110—வினா எண். 11646—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980–81 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்ட பணிகள் எவ்வளவு ?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு ?

(இ) எத்தனை நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன ?

---

*558-562, 576-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது

விடை—

(அ) முடிக்கப்பட்ட பணிகள் 1,749.

(ஆ) மதிப்பு ரூ. 38.27 இலட்சங்கள்.

(இ) 75,240 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது.

### செங்கற்பட்டு கூட்டுறவு அர்பன் வங்கியில் நடைபெற்ற கையாடல்

111. வினா எண். 11743—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு கூட்டுறவு அர்பன் வங்கியில் ரூ. 27,000-க்குக் கையாடல் நடந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

விடை—

(அ) செங்கற்பட்டு கூட்டுறவு நகர வங்கியில் ரூ. 18,892.48 கையாடல் செய்யப்பட்டிருப்பதாக விசாரணையில் தெரிய வந்தது.

(ஆ) கையாடல் செய்யப்பட்ட தொகை முழுவதும் வங்கி ஊழியர்கள் மீது எடுத்த ஒழுங்கு நடவடிக்கையின் காரணமாக வங்கிக்குச் செலுத்தப்பட்டுவிட்டது. வங்கியின் உதவி காசாளர், உதவிச் செயலாளர், இளநிலை உதவியாளர் ஆகிய மூவரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். செங்கற்பட்டு கூடுதல் முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் 31—12—1982ஆம் நாளன்று சிசி. 52 முதல் 54, 83 வரை பட்டிகை எண்களிடப்பட்ட குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### சென்னை அரசினர் மருத்துவமனைக்கு 1978 முதல் 1981 வரை இலவசமாக வழங்கப்பட்ட பொருள்கள்

112—வினா எண். 12400—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் மருத்துவமனைகளுக்குத் தனியாரிடமிருந்து இலவசமாக 1978 முதல் 1981 வரை என்னென்ன பொருட்கள் எவ்வளவு மதிப்புள்ள தொகை வழங்கப்பட்டது ?

(ஆ) அதன் விவரம் யாது ?

விடை—

இவ்வினாவிற்கான விடை ஒரு விவர அறிக்கை * இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

---

* 563-575-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



### தமிழ்நாட்டில் சுண்ணாம்புக்கல் மற்றும் இதர கனிமங்கள் கிடைக்கும் இடங்கள்.

113 —வினா எண். 12407 —திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் சுண்ணாம்புக்கல், வெர்மிகுலைட், குவார்ட்ஸ் மற்றும் பெல்ட்ஸ்பார், இளஞ்சிவப்பு குவார்ட்ஸ், சிலிகா மணல் ஆகியவை எந்தெந்த பகுதிகளில் கிடைக்கின்றன?

(ஆ) 1979 முதல் 1981 முடிய உயர்வகை கனிமங்களை எவ்வளவு வெட்டியெடுத்து விற்பனை செய்துள்ளது ?

விடை —

(அ) (ஆ) விவர அறிக்கைஒன்று *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு அச்சிட இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம்.

114-வினா எண். 12461 —திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு அச்சிட இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம் 1981 ஆம் ஆண்டு திருட்டுப் போய் விட்டதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) அரசு பரிசுச் சீட்டு அச்சிட இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம் திருட்டுப் போகவில்லை. ஆனால், பரிசுச் சீட்டுப் பிரிவிலிருந்து அரசு மத்திய அச்சகத்திலுள்ள பிரதான புத்தகம் கட்டும் பிரிவிற்கு சிமெண்ட் அனுமதி புத்தகங்களில் இலக்கம் இடுவதற்காக எட்டு சுழல் இலக்கமிடும் பெட்டிகள் (Rotary Numbering Boxes) அனுப்பப்பட்டன. அவை தற்போது எங்குள்ளன என்று கண்டுபிடிக்க இயலவில்லை.

(ஆ) மேற்கூறிய எட்டு சுழல் இலக்கமிடும் பெட்டிகள் காணாமற் போய்விட்டதைப் பற்றி எழுது பொருள் அச்சகத் துறை இயக்குநரால் சம்பந்தப்பட்ட நபர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் குற்றவியல் சட்டம்—ஒழுங்குப் பிரிவு காவல்துறை தலைவரும் இதுபற்றி புலனாய்வ

---

* 576-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

செய்து, எல்லாவித முயற்சி செய்து பார்த்தும், குற்றவாளிகளை கண்டுபிடிக்க இயலாமல் போனதால், 31-10-1982 அன்று இக் குற்றம், கண்டுபிடிக்க இயலாமல் போன ஒன்று என, கருதப் பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட நபர்களின் மீது துறை பூர்வமான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 3 உதவிப் பணி மேலாளர்கள், 4 மேற்பார்வைப் பணியாளர்கள், 4 புத்தகம் கட்டுவோர் ஆகிய 11 பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது, இதில் சம்பந்தப்பட்டுள்ள 3 உதவிப் பணி மேலாளர்களில் இரண்டு உதவிப் பணி மேலாளர்கள் குற்றவாளிகள் அல்லவென தீர்மானிக்கப்பட்டு அவர்கள் மீதான குற்றச்சாட்டு கைவிடப் பட்டுள்ளது.. 1 உதவிப் பணி மேலாளர், 4 மேற் பார்வைப் பணியாளர்கள் மற்றும் 4 புத்தகம் கட்டுவோர் மீதான குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதென விசாரணை மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அவ் உதவிப் பணி மேலாளர் எழுத்து பூர்வமான உத்திரவு ஏதுமின்றி எண்ணிடும் சுழல் இயந்திரங் களை வழங்கிய செயலுக்காகவும் இதுபற்றி மேல் அதிகாரிகளுக்கு அறிவிக்கத் தவறியதற்காகவும், அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு அதற்குத் தண்டனையாக மூன்று மாத ஊதிய உயர்வு திரண்ட பயன் ஏதுவுமின்றி (Stoppage of increment for three months without cumulative effect) நிறுத்தி வைக்க ஆணை இடப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட ஒரு இளநிலை முதலாள் ஒருவர், துறை விசாரணையில் குற்றவாளி என கருதப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மூன்று முதுநிலை முதலாள், மற்றும் நான்கு புத்தகம் கட்டுவோரிடம் இருந்து காணாமல் போன சுழல் இலக்கமிடும் இயந்திரத்தின் கிரயத்தை வசூல் செய்யும் பொருட்டு ஒவ்வொருவரிடம் இருந்தும் ரூ. 5,000 (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மாதம் ரூ. 50 வீதம் சனவரி 1983 லிருந்து பிடித்தம் செய்யுமாறு இயக்குநரால் ஆணை இடப்பட்டுள்ளது. காணாமற் போன எட்டு சுழல் இலக்கமிடும் பெட்டிகளின் மொத்த மதிப்பு ரூபாய் 36,600 ஆகும். இம்மாதிரி நிகழ்ச்சிகள் இனி ஏற்படு வதைத் தடுக்க நகரத்திலுள்ள அரசு அச்சகங்களில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

**திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண் கொலை செய்யப்பட்டு நகை களவாடப்பட்டுள்ளது குறித்து எடுத்த நடவடிக்கை.**

115-வினா எண். 12787—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை அரசு மருத்துவ மனையில் கர்ப்பிணிப் பெண் கொலை செய்யப்பட்டு நகை களவாடப்பட்டுள்ளது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



விடை—

[14—9—1981 அன்று திருமதி விஜயலக்ஷ்மி என்னும் பெண் ஒருவருக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் பிரசவம் பார்க்கப்பட்டது. அதுசமயம் மூன்று பணியாளர்கள் (1) திருமதி லோகநாயகி, துணை செவிலிய மகப்பேறு உதவியாளர் (Auxiliary Nurse Midwife) (2) திருமதி ராசாமணி, பெண் செவிலியர் உதவியாளர் (Female Nursing Assistant) மற்றும் (3) செல்வி அல்போன்சா, பெண் சுகாதாரப் பணியாளர் (woman Sanitary Worker) மருத்துவமனையின் பிரசவ விடுதியில் பணியில் இருந் தார்கள். மேற்கூறிய பெண்ணின் பிரசவம் பார்க்கும்பொழுது பிரசவத்திற்குப் பின்பும், இந்த மூன்று பணியாளர்களும் தங்க ளது கடமையில் சில தவறுகள் செய்தது பற்றி வடஆற்காடு மாவட்ட மருத்துவ அலுவலருக்கு முறையீடு வந்தது. மேலும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் 21—9—1981 அன்று இந்த மருத்துவமனைக்குச் சென்றபொழுது வழங்கிய அறிவுரையின்படி, வட ஆற்காடு மாவட்ட மருத்துவ அலுவலர் இது சம்பந்தமாக ஒரு முன் விசாரணை நடத்தினார்.

**முன் விசாரணையில் :—**

(1) திருமதி லோகநாயகி, துணை செவிலிய மகப்பேறு உதவி யாளர் பிரசவத்திற்குமுன் தன் முழங்கையால் விஜயலட்சுமியின் (பெண் நோயாளியின்) வயிற்றை பலமாக அழுக்கியதாகவும், நோயாளியின் இருதய ஓட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சி செய்ய வில்லை என்றும், நோயாளியைக் காப்பாற்ற பணியிலுள்ள செவிலி யரையோ அல்லது பணி மருத்துவ அலுவலரையோ அழைக்க வில்லை என்றும் தெரியவந்தது ;

(2) திருமதி. இராசாமணி, பெண் செவிலியர் உதவியாளர், திருமதி. லோகநாயகி, பெண் நோயாளியின் வயிற்றை பலமாக அழுக்கியதற்கு உதவியாக இருந்தார் என்றும் மற்றும் அவர் லோக நாயகியுடன் சேர்ந்து பெண் நோயாளியை கொண்டுவந்தவர் களிடமிருந்து பணம் கேட்டதாகவும் தெரிய வந்தது ;

(3) செல்வி அல்போன்சாமேரி என்ற பெண் சுகாதாரப்பணி யாளர், பெண் நோயாளி இறந்தபின், அவரது உடலிலிருந்து மொத்தம் சுமார் ரூ. 1,500 மதிப்புள்ள தாலி மற்றும் தங்க நகைகளை திருடியதாக சந்தேகிக்கப்பட்டது.

2. வடஆற்காடு மாவட்ட மருத்துவ அலுவலரால் மேற் குறிப்பிட்ட மூன்று பணியாளர்களும் முதலில் திருவண்ணாமலை அரசு மருத்துவ மனையிலிருந்து வேறு இடங்களுக்கு மாற்றப் பட்டனர். மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநர்,

இந்த வழக்கை முன்னோக்காக பார்க்கும்பொழுது இந்த மூன்று பணியாளர்கள் மீதுள்ள தவறுகள் கடுமையானதாக இருக்கும் மென்று கருதியதால், இவர்களை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்தால் மட்டும் போதாது என்று கருதி 23—10—1981 அன்று இந்த மூன்று பணியாளர்களை உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்யும்படியும், மேலும் இந்த மூவர் மீதும் தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல் முறையீடு) விதிகள் விதி 17(பி)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வடாற்காடு மாவட்ட மருத்துவ அலுவலருக்கு ஆணையிட்டார். இயக்குநரின் ஆணையின்படி, வட ஆற்காடு மாவட்ட மருத்துவ அலுவலர், திருமதி. லோகநாயகி, திருமதி இராசாமணி, செல்வி அல்பொன்சா மேரி ஆகிய மூவரையும் முறையே 2—11—1981, 7—11—1981, 3—11—1981 முதல் தற்காலிகப் பணிநீக்கம் செய்து, அவர்கள் மீது, மேற்கூறிய விதிமுறைகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அவர்கள் செய்த தவறுகள் குறித்து குற்றச்சாட்டு குறிப்பாணையை வழங்கி, அவர்கள் கொடுத்துள்ள தற்காப்பு அறிக்கையையும் பெற்று, இந்த வழக்கில் 23—1—1982 அன்று ஒரு வாய்மொழி விசாரணையையும் நடத்தினார். விசாரணை அலுவலரது (வட ஆற்காடு மாவட்ட மருத்துவ அலுவலரது) விசாரணை அறிக்கையின் மூலம் கீழ்க்கண்டுள்ள விவரங்கள் தெரியவந்துள்ளன.

(1) 14—9—1981 அன்று மாலை 4-00 மணிக்கு திருமதி. விஜயலஷ்மி என்னும் பெண் நோயாளி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அவருக்கு அன்று மாலை 6.20க்கு உயிருடன் ஒரு பெண் குழந்தை பிறந்தது. இந்தப் பிரசவத்தை திருமதி லோகநாயகி, துணை செவிலியர் மகப்பேறு உதவியாளர் பார்த்திருக்கிறார்.

(2) பிரசவம் பார்க்கும்பொழுது, பிரசவத்திற்கும் முன், திருமதி லோகநாயகி பெண் நோயாளியின் அடிவயிற்றை (பிரசவத்திற்கு பக்குவமான நிலையை அடையுமுன்பே) பலமாக, அமுக்கியுள்ளார்.

(3) திருமதி லோகநாயகி மாலை 6.20 முதல் 7.00 மணி வரை பெண் நோயாளியை சரிவர கவனியாமல் அவரது மோசமாகிக் கொண்டிருக்கும் நிலைமையை, பகுதி பணி செவிலியருக்கோ அல்லது பணி மருத்துவ அலுவலருக்கோ அறிவிக்காமல் தனது கடமையிலிருந்து தவறியுள்ளார். [பெண் நோயாளியின் மோசமான நிலைமை மாலை 7 மணிக்குத் தான் பணி செவிலியருக்கு அறிவிக்கப்பட்டு, அவரும் உடனடியாக பெண் நோயாளிக்கு சிகிச்சை அளித்திருக்கிறார். அதற்குப் பின்புதான், பணி மருத்துவ அலுவலருக்கு அறிவிக்கப்பட்டு, அவரும் 7.15 மணிக்கு தன்னால் முடிந்த அளவு சிகிச்சை அளித்துப் பெண் நோயாளியின் உயிரைக் காப்பாற்ற முயன்றிருக்கிறார். மேலும், பணி மருத்துவ





அலுவலர், அது சமயம் வீட்டிலிருந்த பெண் மருத்துவ அலுவல
ருக்கு (மகப்பேறு மருத்துவ நிபுணருக்கு) குறிப்பாணை அனுப்பி
அவரும் வந்து, சுமார் 8.00 மணிக்குத் தன்னால் முடிந்த சிகிச்சை
அளித்தும், பெண் நோயாளியின் உயிரைக் காப்பாற்ற முடிய
வில்லை. பெண் நோயாளி சுமார் 8.30க்கு இறந்து விட்டார்.]
திருமதி லோகநாயகி மீது மேலே (2) மற்றும் (3)இல் குறிப்பிட்
டுள்ள இரண்டு குற்றச்சாட்டுகளும் மெய்பிக்கப்பட்டுள்ளன.
திருமதி லோகநாயகி பெண் நோயாளியின் தாயாரிடமிருந்து
பணம் ஒன்றும் பெறவில்லை என்று புலனாகிறதால், இவர்
இலஞ்சமாகப் பணம் கேட்டார் என்ற குற்றச்சாட்டு மெய்ப்பிக்
கப்படவில்லை.

3. திருமதி இராசாமணி, பெண் செவிலியர் உதவியாளர், திருமதி. லோகநாயகி, துணை செவிலியர் மகப்பேறு உதவியாளர், இந்த பிரசவம் பார்க்கும்பொழுது உதவியாக இருந்து, அவரும் (இராசாமணியும) பெண் நோயாளியின் அடிவயிற்றை பலமாக அமுக்கியதற்கு உதவி புரிந்துள்ளார் என்னும் ஒரே குற்றச்சாட்டு திருமதி இராசாமணி மீது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. திருமதி இராசாமணி, திருமதி. லோகநாயகியுடன் சேர்ந்து பணம் கேட்டார் என்ற குற்றச் சாட்டு மெய்ப்பிக்கப்படவில்லை.

4. இந்த ஒழுங்கு நடவடிக்கையில் திருமதி. லோகநாயகிக்கு, அவருடைய ஊதிய உயர்வை 5 ஆண்டுக்குத் திரண்ட பயனுள்ள வகையில் நிறுத்தி வைக்கும் தண்டனையையும், திருமதி. இராசாமணிக்கு அவருடைய ஊதிய உயர்வை இரு ஆண்டுகளுக்குத் திரண்ட பயனுள்ள வகையில் நிறுத்தி வைக்கும் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

5. செல்வி அல்போன்சாமேரி, பெண் சுகாதாரப் பணியாளர் பெண் நோயாளி இறந்த பின் அவரது தாலியின் பகுதிகளைத் திருப்பு மருத்துவமனையில் குளியளறையின் காற்றுப்போக்கியில், மறைந்து வைத்துள்ளார் என்று சந்தேகப்பட்டு, காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டு, காவல் துறையினரும் நகைகளின் சில பகுதிகளை அங்கிருந்து கண்டெடுத்தார்கள். காவல்துறையினரால் செல்வி அல்பொன்சாமேரி மீது வழக்கு எடுக்கப்பட்டுள்ளது. துறைவழி ஒழுங்கு நடவடிக்கையில் இவர்மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு இவர் பணியறவு (Dismissal) செய்யப்பட்டுள்ளார்.

அரக்கோணம் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு சொந்த கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு.

116—வினா 12830—திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரக்கோணத்தில் தற்பொழுது வாடகை கட்டிடத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம்.

ஆர். எஸ். மங்கலம் மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு.

117—வினா 12882—திரு செ. சிவசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆர். எஸ். மங்கலம் மேல்நிலைப் பள்ளிக்கு 6 ஆவது வகுப்பு நடைபெறும் 6 அறைகளையும் ஓலைக் குடிசையை மாற்றி கல் கட்டிடம் கட்டும் உத்தேசம் உண்டா?

விடை—

1982-83 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து இப்பள்ளிக்கு இரு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட பள்ளிக் கல்வி இயக்குநர் அளவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மதுராந்தகம் தொகுதியில் கடைகள் அதிகப்படுத்தும் திட்டம்.

118—வினா 13094—திரு எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் எத்தனை கிராமக் கூட்டுறவுக் கடைகள் எங்கு எங்கு இயங்குகின்றன?

(ஆ) மேலும் கூட்டுறவுக் கடைகள் அதிகப்படுத்தும் திட்டம் உள்ளதா?



விடை—

(அ) மதுராந்தகம் தொகுதியில் 201 கிராமக் கூட்டுறவுக் கடைகள் இயங்குகின்றன. விவரப்பட்டியல் * இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஒரு கடைக்கு அரசு நிர்ணயித்துள்ள உயர்ந்த பட்ச குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 2,000 ஆகும். 2,000 அட்டைகளுக்கு மேல் எந்தக் கடையிலும் இல்லாததால் கடைகள் அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

தஞ்சை மாவட்டம் கீர்த்தி மன்னார் பிரிவிலிருந்து அம்மன்குடி வாய்க்காலுக்கு ஒரு ரெகுலேட்டர் அமைக்க அரசு முன் வருதல்.

119—வினா 13433—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டம், காவிரி கோட்டம கீர்த்தி மன்னார் பிரிவிலிருந்து அம்மன்குடி வாய்க்காலுக்கு ஒரு ரெகுலேட்டர் அமைக்க அரசு முன்வருமா

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): கீர்த்தி மன்னாற்றில் மைல் 64—7—350 இல் ரெகுலேட்டர் 1982 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு பாசனத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.

போளூர் ஒன்றியத்தில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர் மற்றும் கட்டிட வசதி பற்றிய விவரம்

120—வினா 13868—திரு இல. பலராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் ஒன்றியத்தில் உள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் எவ்வளவு?

(ஆ) இதில் பயிலும் மாணவர்கள் எவ்வளவு பேர்கள்?

(இ) இவைகளில் படிக்கப் போதுமான கட்டிட வசதி இல்லாத பள்ளிகள் எத்தனை?

---

*579-585-ம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பெற்றுள்ளது

விடை—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகள் .. .. 4

அரசு மேல்நிலைப் பள்ளிகள் .. .. 3

வனத் துறை உயர்நிலைப் பள்ளி .. .. 1

(ஆ) இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை பற்றிய விவரம் பள்ளிவாரியாக கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

(இ) அனந்தபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளியிலும் ஜம்னாமரத்தூர் வனத்துறை பள்ளியிலும் போதிய இடவசதி இல்லை.

வட ஆற்காடு மாவட்டம், போளூர் ஒன்றியத்தில் உள்ள உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விவர அறிக்கை :—

| (1) | ஆண்கள். (2) | பெண்கள். (3) |
|---|---|---|
| 1 அரசு மேல்நிலைப்பள்ளி, (போளூர் (ஆண்கள்) .. .. .. | 1,263 | 36 |
| 2 அரசு மேல்நிலைப் பள்ளி, போளூர் (பெண்கள்) .. .. .. | .. | 629 |
| 3 அரசு மேல்நிலைப் பள்ளி, களம்பூர். | 615 | 226 |
| 4 அரசு உயர்நிலைப் பள்ளி, அத்திமூர். | 127 | 39 |
| 5 அரசு உயர்நிலைப் பள்ளி, கேளூர் .. | 285 | 111 |
| 6 அரசு உயர்நிலைப் பள்ளி, சந்தவாசல். | 488 | 187 |
| 7 அரசு உயர்நிலைப் பள்ளி அனந்தபுரம் .. .. .. | 290 | 69 |
| 8 வனத்துறை உயர்நிலைப் பள்ளி, ஜம்னாமரத்தூர் .. .. | 241 | 27 |



ஈரோடு வட்டம் பேரோடு ஊராட்சி, சுத்துக்கரடு ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா அளிக்கும் செயற்குறிப்பு.

121—வினா 14114—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு வட்டம், பேரோடு ஊராட்சி, சுத்துக்கரடு அரிஜன மக்கள் வீட்டுமனைக்கு இடம் கோரி அரசிற்கு விண்ணப்பித்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு வட்டம், பேரோடு ஊராட்சி, சுத்துக்கரடு ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க பேரோடு கிராம க.ச. எண். 236/1-ல் 1.13 ஏக்கர் நிலம் ஆதி திராவிட நில ஆர்ஜிதசட்டம் 31/78-ன் கீழ் அவார்டு எண் 28/1980ன்படி ஆர்ஜிதம் செய்யப்பட்டு உள்ளது. ஆனால் அரிஜன நல நில ஆர்ஜிதச் சட்டம் 31/78, சென்னை உயர்நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. இதனால் உயர்நீதி மன்றம் பட்டாதாரர்களின் நீதிப் பேராணை மனுவின் (Writ Petition) பேரில் எல்லா மேல் நடவடிக்கைகளையும் நீதிப்பேராணை 7086-ல் பல்வகை நீதிப்பேராணை (W. M. P.) 9606/80-ல் நிறுத்தி வைத்துள்ளது. எனவே மேல் நடவடிக்கை எடுத்து ஆதி திராவிடர்களுக்கு பட்டா வழங்க இயலவில்லை. உயர்நீதி மன்ற தீர்ப்பை எதிர்த்து இதுபற்றி டெல்லி உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதால் நடவடிக்கை அதே நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடன் நிவாரண சட்டத்தின்படி நிவாரணம் அளித்து தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள்.

122—வினா 14286—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடன் நிவாரண சட்டத்தின்படி, நிவாரணம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள், மாவட்ட வாரியாக எண்ணிக்கை என்ன ?

(ஆ) கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளித்து தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் மாவட்ட வாரியாக விவரம் என்ன ?

விடை :—(அ) மற்றும் (ஆ) : 1—7—1983 முடிய கடன் நிவாரணம் கோரி பெறப்பட்ட மனுக்களும், நிவாரணம் அளித்து தீர்ப்பளிக்கப்பட்ட மனுக்களின் விவரங்கள் பின்வருமாறு :—

| மாவட்டம். | கடன் நிவாரணம் கோரி பெறப்பட்ட மனுக்கள். | கடன் நிவாரணம் அளித்து தீர்ப்பளிக்கப் பட்ட மனுக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சென்னை .. .. | 1,106 | 344 |
| 2 செங்கல்பட்டு .. .. | 3,326 | 477 |
| 3 வட ஆற்காடு .. | 14,151 | 1,018 |
| 4 தென் ஆற்காடு .. | 22,678 | 505 |
| 5 தஞ்சாவூர் .. .. | 9,983 | 1,658 |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 16,966 | 5,737 |
| 7 புதுக்கோட்டை .. | 3,549 | 525 |
| 8 சேலம் .. .. | 9,201 | 507 |
| 9 தர்மபுரி .. .. | 4,115 | 398 |
| 10 பெரியார் .. .. | 3,776 | 562 |
| 11 கோயம்புத்தூர் .. | 3,210 | 385 |
| 12 நீலகிரி .. .. | 1,083 | 256 |
| 13 மதுரை .. .. | 17,282 | 1,420 |
| 14 இராமநாதபுரம் .. | 16,455 | 1,065 |
| 15 திருநெல்வேலி .. | 7,781 | 544 |
| 16 கன்னியாகுமரி .. | 3,536 | 492 |

முத்திரைக் கட்டணத்தாள், திரைத்தாள் நகல் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நீதி மன்றக் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு.

123—வினா 14471—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முத்திரைக் கட்டணத்தாள் (Court Fee Stamp) மூலம் மற்றும் முத்திரைத்தாள் நகல் (Copy Fee Stamp Pap rs) மூலமும் அரசுக்கு வரும் சராசரி வருமானம் எவ்வளவு ?

(ஆ) இவ்வருமானத்திலிருந்து நீதிமன்றங்களுக்குள் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கு எவ்வளவு செலவிடப்படுகிறது ?





விடை—

(அ) முத்திரைக் கட்டணத்தாள் விலைகளின் விற்பனையில் 1980-81 பெறப்பெற்ற வருமானம் .. ரூ. 6,42,62,666·00

முத்திரைத்தாள் நகல் (Copy Stamp Paper) விற்பனையில் 1981-ல் பெறப்பெற்ற வருமானம் .. ரூ. 14,36,650·00

(ஆ) நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்காக செலவினங்களை அரசு பொது நிதியிலிருந்து செலவு செய்ய அரசு அனுமதிக்கிறது. நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கு முத்திரைக் கட்டண வில்லை விற்பனையில் பெறப்பெற்ற வருமானத்திலிருந்து ஒதுக்கப்படுவதில்லை. நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கான செலவுகள் பொதுப்பணித் துறையினால் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் செலவு செய்யப்பட்டு பொதுப்பணித்துறை கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படுகிறது.

சுதர்சன் சிட் பண்ட்ஸ்/சீட்டுக் கம்பெனியினர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம்.

124—வினா 14518—திரு பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு வரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—,

(அ) சுதர்சன் சிட் பண்ட்ஸ் என்ற சீட்டுக் கம்பெனி தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும், சென்னையிலும் சீட்டுக் கம்பெனி நடத்தி, அது தற்போது செயல்படாமலும், அதில் பணம் செலுத்திய பொது மக்கள் திரும்ப பணம் கிடைக்காமல் அவதிப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) இந்த சீட்டுக் கம்பெனியாரின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சுதர்சன் சிட்டு நிறுவனத்தின் பதிவு அலுவலகம் ( Regist red Office ) கேரள மாநிலத்தில் உள்ளது. இந்நிறுவனம் கலைக்கப்பட வேண்டும் எனக் கோரி உயர்நீதி மன்றம் ஆணையிட்டு கலைப்பு அலுவலரை நியமித்துள்ளது. இதனால் இந்நிறுவனம் கேரள உயர்நீதி மன்றம் அனுமதியின்றிச் செயல்பட இயலாது. இந்நிறுவனத்திடமிருந்து சந்தாதாரர்களுக்குச் சேரவேண்டிய தொகை குறித்து அவர்கள் கலைப்பு அலுவலருக்கு எழுதவேண்டும். அவ்வலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் கேரள உயர்நீதி மன்றம் பிறப்

பிக்கும் ஆணையின்படி இச்சந்தாதாரர்களுக்கு உரிய தொகையோ அல்லது வீதாசார தொகையோ வழங்கப்படும். இது நிகழ சில ஆண்டுகள் ஆகும். இதனால் தமிழ் நாட்டிலும், சென்னை நகரிலும் உள்ள சந்தாதாரர்கள் பாதிக்கப்பட்டிருப்பது உண்மை.

சீட்டு நிறுவனம் கலைக்கப்பட வேண்டும் என கேரள உயர்நீதி மன்றம் ஆணையிட்ட பின்னர் அனைத்து நடவடிக்கைகளும் மைய அரசின் 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் அடிப்படையில் நடைபெற வேண்டும். இது தொடர்பாக இந்த மாநில அரசு சீட்டுக் கம்பெனியினர் மீது எடுக்கத் தக்க நடவடிக்கை யாதும் இல்லை.

**மதுரை மாவட்டத்தில் கல்லூரி, மேல்நிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்கள் எண்ணிக்கை.**

125—வினா 15145—திரு இரா. முத்தையா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் கல்லூரி, மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவைகளிலும் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அதில் அரசாங்கத்தின் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) மதுரை மாவட்டத்தில் கல்லூரி, மேல்நிலைப் பள்ளி உயர்நிலைப்பள்ளி ஆகியவைகளில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவர்களின் எண்ணிக்கை 1,42,207.

(ஆ) அதில் அரசாங்க உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை (இதில் உதவித் தொகைக்குப் பதிலாக இலவசப் பாட புத்தகங்கள் பெறும் மாணவர்கள் உட்பட) 1,40,595.

**செங்கற்பட்டு மாவட்டத்தில் முன்னாள் இராணுவத்தினர்களுக்கு வழங்கியுள்ள சலுகைகள் தாலுக்கா வாரியாக விவரம்.**

126– வினா 15461—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் முன்னாள் இராணுவத்தினர் எத்தனை பேர் உள்ளனர் ?

(ஆ) அவர்களுக்கு அரசு வழங்கியுள்ள சலுகைகள் யாது ?

(இ) தாலுக்கா வாரியாக விவரம் அளிக்கப்படுமா?



விடை—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் கருவூலம் மூலம் ஓய்வூதியம் பெறும் முன்னாள் படை வீரர்களின் எண்ணிக்கை 2,656 ஆகும்.

(ஆ) முன்னாள் இராணுவத்தினருக்கு மாதாந்திர நிதியுதவி, உடனடி நிதியுதவி, ஈமச் சடங்கு நிதியுதவி, நோயாளிகளுக்குக் கைப்பணம், விதவைகளுக்கு நிதியுதவி, போரில் உயிர் நீத்தவரின் குடும்பத்தினருக்கு பராமரிப்பு உதவி என பல்வேறு நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் வட்டிச் சலுகையும் வழங்கப்பட்டுள்ளன.

(இ) தாலுக்கா வாரியாக செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு 1982-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ள நிதி உதவிகள் மற்றும் வங்கி வட்டிச் சலுகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடனுதவி குறித்த விவரங்கள் *இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**1981 ஆம் ஆண்டில் அரசு நடத்தும் விடுதிகளில் இடம் கேட்டு மனு செய்த மாணவ, மாணவியர் எண்ணிக்கை.**

127. வினா எண் 15681—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1981ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியாக அரசு நடத்தும் விடுதிகளில் எத்தனை மாணவர், மாணவியர் விடுதி இடம் கேட்டு மனு செய்தார்கள் (உயர்நிலைப்பள்ளி).

(ஆ) அவர்களில் எத்தனை மாணவ, மாணவியர்களுக்கு (உயர்நிலைப்பள்ளி) இடம் கிடைத்தது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

1981ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியாக அரசு நடத்தும் உயர்நிலைப் பள்ளி விடுதிகளில் இடம் கேட்டு மனு செய்த மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையும் அவர்களில் எத்தனை பேருக்கு அவ்விடுதிகளில் இடம் கிடைத்துள்ளது என்பது பற்றிய தகவல்கள் **இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது :—

---

*586–589-ம் பக்கங்களில் இணைப்பு VIஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**590-ம் பக்கத்தில் இணைப்பு VIIஆக அச்சிடப்பெற்றுள்ளது

அச்சிறுப்பாக்கத்தில் பால்வாடிப் பள்ளிகளின் எண்ணிக்கை.

128—வினா எண் 15789 : திரு. சி. கணேசன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் மொத்தம் எத்தனை பால்வாடிப் பள்ளிகள் செயல்படுகின்றன ?

(ஆ) எந்தெந்த கிராமங்களில் ?

(இ) அவை மற்ற கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா ?

விடை—

(அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் மொத்தம் 68 குழந்தைகள் நல மையங்கள் செயல்படுகின்றன.

(ஆ) விபர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) குழந்தைகள் எண்ணிக்கையைப் பொறுத்தே குழந்தை நல மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 70 முதல் 150 குழந்தைகளுக்கு ஒரு மையம் வீதம் அமைக்கப்பட்டுள்ளது. அச்சிறுபாக்கம் தொகுதியில் அடங்கியுள்ள அனைத்து கிராமக் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விபர அறிக்கை.

(ஆ) அச்சிறுபாக்கம் தொகுதியில் கீழ்க்கண்ட கிராமங்களில் குழந்தைகள் நல மையங்கள் (பால்வாடி பள்ளிகள்) செயல்படுகின்றன.

1. கடலூர்.
2. மாத்தூர்.
3. அகிலி.
4. ஒரத்தூர்.
5. பத்திரி.
6. ராமாபுரம்.
7. காட்டுக்கரணை.
8. நேமம்.
9. உத்தமலூர்.
10. சீதாபுரம்.
11. திம்மாபுரம்.
12. தண்டலம்.
13. கோட்டகயபாக்கம்.
14. மாதூர்.
15. எலப்பாக்கம்.
16. அனைப்புரம்.
17. பொற்பானர்கரணை.
18. குணண்கரணை.
19. பொரகல்.
20. காட்டுப்பிள்ளையார் கோவில்.
21. ஒரத்தி.
22. வலமணிப்பாக்கம்.
23. பேப்பங்கரணை.
24. எட்டிபட்டு.
25. விளம்பூண்டி.
26. திமவோர்.





27. ஒட்டப்பாளையம்.
28. அனந்தமங்கலம்.
29. கொங்கரைமாம்பட்டு.
30. கிருதமூர்.
31. முருங்கை.
32. காரசங்கல்.
33. வலியம்பாக்கம்.
34. நெடுங்கல்.
35. களத்தூர்.
36. கீழத்திவாக்கம்.
37. சிருபைரபோண்டி.
38. கல்லியகுளம்.
39. கடமலைப்புதூர்.
40. எபுராயன்பேட்டை.
41. பெரும்பயிர்கண்டிகை.
42. எம். சித்தனூர்.
43. எடயாலம்.
44. தொழுப்பேடு.
45. ஆத்தூர்.
46. உணமலை.
47. மேரப்பாக்கம்.
48. கருக்ரசிவிலாகம்.
49. பள்ளிப்பேட்டை.
50. மலைகாலணி.
5 . காந்திநகர்.
52. வெங்கடேசபுரம்.
53. அச்சரப்பாக்கம்.
54. சே. சிதமூர்.
55. வேடந்தாங்கல்.
56. வலயபுதூர்.
57. தீசுளம்.
58. தண்டரை.
59. பாப்பநல்லூர்.
60. கடம்பூர்.
61. ஆலப்பாக்கம்
62. எல். எண்டத்தூர்.
63. கீழமூர்.
64. ஒட்டக்கோவில்.
65. கிளியநகர்.
66. செம்பூண்டி.
67. பெரும்பாக்கம்.
68. தொரையூர்.

*Details of Minister who had gone abroad.*

129 16111. *Q.*— THIRU N. S. V. CHITTHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the details of the Ministers who had gone abroad during the last three years ;

(*b*) the purposes of their visits ;

(*c*) the duration of their stay abroad ; and

(*d*) the countries they have visited ?

விடை

(அ), (ஆ) (இ) மற்றும் (ஈ) விவரங்கள் *இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது

1981 ஜனவரி முதல் 1982 டிசம்பர் வரை விசாரணைக் கைதிகளாக இருந்து சிறையில் இறந்தவர்களின் எண்ணிக்கை.

130—வினா 16232—திரு. தா. பழனிவேல் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக சிறைகளில் விசாரணைக் கைதிகளாக இருந்து இறந்தவர்கள் ஜனவரி 1,1981 முதல் டிசம்பர் 31,1982 முடிய எவ்வளவு பேர்கள் ?

*591-593-ம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

விடை—

தமிழக சிறைகளில் ஜனவரி 1, 1981 முதல் டிசம்பர் 31, 1982 வரை உள்ள கால அளவிற்குள் விசாரணைக் கைதிகளாக இருந்து இறந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

1982-83ல் பொறியியல் கல்லூரிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதி திராவிட மாணவர்கள்.

131—வினா 16340ஏ—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1981-82-ல் பொறியியற் கல்லூரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதி திராவிடர் மாணவர் மொத்தம் எவ்வளவு?

(ஆ) மலை ஜாதியினர் மட்டும் எத்தனை பேர்?

(இ) ஆதி திராவிடர், மலை ஜாதியினர் தனித்தனி சதவீதம் எவ்வளவு?

விடை—

(அ) 1981-82-ல் பொறியியற் கல்லூரிகளில் ஆதி திராவிடர்/மலை ஜாதியினருக்கென ஒதுக்கப்பட்ட 18 சதவீத இடங்களின் எண்ணிக்கை 252. மொத்தம் சேர்க்கப்பட்ட மாணவர்கள் 261. இதில் ஆதி திராவிடர் மாணவர்களின் எண்ணிக்கை 232.

(ஆ) மலை ஜாதி மாணவர்கள் எண்ணிக்கை 29.

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதி திராவிடர் மாணவர் சதவீதம் 16.59, மலைஜாதி மாணவர் சதவீதம் 2.07 மொத்தம் 18.66.

தமிழகத்தில் உள்ள தியணைப்பு நிலையங்கள்.

132 வினா 16552—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் உள்ளன? (மாவட்ட வாரியாக).

விடை—

இது குறித்த விவரம் இணைப்பாக * கொடுக்கப்பெற்றுள்ளது.

*594-597ம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகளைக் கவர அரசு எடுத்த நடவடிக்கை (1980-81, 1981-82)

133—வினா 16802—திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகளைக் கவர அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

(ஆ) 1980-81, 1981-82-ல் செலவு என்ன?

விடை:

(அ) மற்றும் (ஆ) ஒரு விவரமான அறிக்கை கீழே கொடுக்கப்படுகின்றது.

விவர அறிக்கை

(அ) கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் திட்டங்களை செயல்படுத்த ரூ. 16 கோடியில் சுற்றுலா பெருந்திட்டம் ஒன்று தீட்டப்பட்டு, நிதி வசதிக்கேற்ப திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வண்ணக்கையேடுகள் மூலமும், விளம்பரங்கள் மூலமும் கன்னியாகுமரிக்கு மத்திய அரசு சுற்றுலா அலுவலகங்கள் மூலம் உலகெங்கிலும் விளம்பரம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இரண்டு ஓட்டல்களை இங்கே நடத்துகின்றது. தங்குமிடமும், உணவும், சிக்கனச் செலவில் இங்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுப் பயண பேருந்துகள் கன்னியாகுமரியைத் தொடுகின்றன. ஒரு மாவட்ட சுற்றுலா அலுவலகமும் கன்னியாகுமரியில் செயல்படுகின்றது.

(ஆ) 1980-81ஆம் ஆண்டில் துயிலக விடுதி கட்டுவதற்கு ரூ. 5.00 இலட்சமும், சுற்றுலா அலுவலகம் கட்டுவதற்கு ரூ. 1.00 இலட்சமும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 1981-82ஆம் ஆண்டில் சுற்றுலா அலுவலகம் கட்டுவதற்கு கூடுதலாக ஒரு லட்சத்தி இரண்டாயிரத்தி ஐநூறு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 1,84,417 துயிலக விடுதிக்காகவும், ரூ. 90,894 சுற்றுலா அலுவலகம் கட்டுவதற்கும் இதுவரை செலவிடப்பட்டுள்ளது. வனம் மற்றும் மீன்வளத் துறை, சின்னமுட்டம் என்ற இடத்தில் ரூ. 234.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மீன் பிடிக்குந் துறைமுகம் ஒன்று நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்து ஆணை பிறப்பித்துள்ளது.

D 2 A 176

[1984 அக்டோபர் 15

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையில் 1982-83 நிதி ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்புதல் அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1. கட்டண கழிப்பிடங்கள் .. .. .. | 2.50 |
| 2. அங்காடிகள் .. .. .. .. .. | 6.00 |
| 3. போக்குவரத்து முனைகள் .. .. .. | 4.00 |
| 4. பொழுது போக்கு மையங்கள் .. .. | 4.00 |
| 5. பாலர் பூங்கா .. .. .. .. | 2.00 |
| மொத்தம் .. | 18.50 |

தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதி வகுப்பினருக்கு இட ஒதுக்கீட்டு விதி பதவி உயர்வின் போதும் கடைப்பிடிக்கும் செயற் குறிப்பு

134—வினா 16945—திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசியல் எந்தெந்த துறைகளில் தாழ்த்தப் பட்ட மற்றும் மலைஜாதி ஊழியர்களுக்கு பதவி உயர்வின்போது இடஒதுக்கீடு (Reservation in Promotional Posts) இருக்கிறது?

(ஆ) இந்த முறை அரசின் அனைத்துத் துறைகளுக்கும் விஸ் தரிக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): இட ஒதுக்கீட்டு விதி பதவி உயர்வின்போது கடைப்பிடிக்கப்படுவதில்லை. நேர்முகத் தேர்வுகளிலும், பணி மாற்றம் மூலம் பணியிடங்கள் நிரப்பப்படும்போதும் ஒருசில பணிப் பிரிவுகளுக்கு மட்டுமே, இட ஒதுக்கீட்டு விதி கடைப் பிடிக்கப்படுகிறது. பதவி உயர்வின்போது இட ஒதுக்கீட்டு விதியைக் கடைப்பிடித்தல் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் தற்போதுள்ள விதிகளில் மாற்றம் தேவையில்லை என்று அமைச்சரவை மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.



1984 அக்டோபர் 15]

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1980 முதல் 1982 டிசம்பர் முடிய நிலப்பட்டா கிடைப்பதற்கு அரசு நிர்ணயம்

135—வினா 17035—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டு முதல் 1982 டிசம்பர் முடிய எத்தனை பேருக்கு நிலப்பட்டா வழங்கப் பட்டுள்ளது;

(ஆ) நிலப்பட்டா கிடைப்பதற்கு அரசு நிர்ணயித்திருக்கிற விதி முறைகள் யாவை?

விடை—

(அ) மற்றும் (ஆ) விவரப்பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

விவரப் பட்டியல்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1980-ம் ஆண்டு முதல் 1982 டிசம்பர் முடிய ஒப்படை செய்யப்பட்ட நிலப்பட்டாக்களின் எண்ணிக்கையும் பரப்பளவும்.

| வருடம் | ஆதிதிராவிடர் பழங்குடியினர் | | இதரர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டாக்களின் எண்ணிக்கை | பரப்பளவு | பட்டாக்களின் எண்ணிக்கை | பரப்பளவு | பட்டாக்களின் எண்ணிக்கை | பரப்பளவு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | ஏ. செ. | | ஏ. செ. | | ஏ. செ. |
| மாவட்டத்தின் பெயர் கன்னியாகுமரி. | | | | | | |
| 1980-81 | 2 | 0.54 | 454 | 251.55 | 456 | 252.09 |
| 1981-82 | 36 | 17.07 | 159 | 52.24 | 195 | 69.31 |
| 1982-83 | .. | — | 50 | 20.71 | 50 | 20.71 |
| மொத்தம் .. | 38 | 17.61 | 663 | 324.50 | 701 | 342.11 |

(ஆ) நிலப்பட்டா கிடைப்பதற்கு அரசு நிர்ணயித்துள்ள விதி முறைகள்

நேரடியாகப் பயிர் தொழிலில் ஈடுபடக்கூடிய நிலமற்ற ஏழை மக்களுக்கு நீண்ட நாள் தரிசாகக் கிடந்த நிலங்களில் இக்கொள் கையின் கீழ் இலவசமாக வழங்கப்படும். 5 பேர் அல்லது அவர் களுக்குக் குறைவாக உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம்

ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குச் குறைவாக வருமானமிருப்பின் அவர் ''ஏழை'' எனக் கருதப்படுகிறார். அவ்வாறே, ஒரு குடும்பத்தில் 5 பேருக்கு அதிகமாக இருப்பின் அவரது மாத வருமானம் ரூ. 250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் ''ஏழை'' என்று கருதப்படுகிறார்.

பயிரிடத்தக்க நிலங்கள் தகுதியுள்ளவர்களுக்கு பின்வரும் முன்னுரிமை அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன;

(1) போரில் இறந்துபட்ட அல்லது ஏலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்கள்.

(2) நிலமற்ற ஏழை ஆதி திராவிடர், பழங்குடியினர்.

(2)(அ) பொதுக் காரியங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டதனால் நிலச் சொந்தக்காரராகவோ குத்தகைதாரராகவோ நேரடியாகப் பயிரிட்டு வந்த நிலங்கள் புன்செய் நிலமாயிருந்தால் 3 ஏக்கருக்குக் குறைவாக அல்லது நன்செய் நிலமாக இருந்தால் 1½ ஏக்கருக்குக் குறைவாக வைத்துள்ளவர்கள். ஆனால், கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டு இருப்பின், நிலத்தின் மதிப்பு அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

(2) (ஆ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டத்தின் (மத்தியச் சட்டம், 19/1976ன் கீழ் கொத்தடிமை பயிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்.

(3) முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படையினர், முன்னாள் அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர்.

(4) பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்.

(5) தங்கக்கட்டுப்பாடு ஆணையினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள்.

(6) முன்னாள் கள் இறக்குவோர்.

(7) ஏனைய நிலமற்ற ஏழைகள்.

(8) விடுதலை செய்யப்பட்ட கைதிகள்.

பயிரிடுவதற்காக நிலம் ஒப்படை செய்யப்படுவதில் மேற்கூறிய முன்னுரிமை வரிசைப்படி, போரில் இறந்துபட்ட அல்லது ஏலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர் பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு அடுத்த உயர் முன்னுரிமை நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள், பழங்குடியினருக்கு அளிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும்நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்



136278

கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால் அங்கு ஒருவருக்கு உயரளவு ஒரு ஏக்கர் புன்செய் நிலமோ, அரசு தரிசு நன்செய் நிலமாயிருந்தால் 1/2 ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகிறது. நிலம் ஒப்படை செய்யப்பட்டவர், அவ்வாறு நிலம் ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குள் அந்த நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். 10 ஆண்டுக் காலத்திற்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி பராதீனம் செய்யவோ கூடாது. ஆனால், பயிரிடுவதற்காக, கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கலாம். நிலம் ஒப்படை செய்யப்பட்டவரே நிலத்தைப் பயிரிட வேண்டும் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினரோ, கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளரோ தான் அந்த நிலத்தைப் பயிரிட வேண்டும் வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக் கூடாது.

### தஞ்சை மாவட்டத்தில் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள்

136—வினா 17235—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1–1–1981 முதல் 31–12–1982 வரை கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் எத்தனை பேர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்?

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1–1–1981 முதல் 31–12-1982 வரை கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் 278 பேர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன,

விவரம்.

| | |
|---|---|
| 1981 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது .. .. | 169 |
| 1982ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது .. .. | 109 |
| மொத்தம் .. | 278 |

[1984 அக்டோபர்

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் 1–1–1981 முதல் 31–12–1982 முடிவான காலத்தில் 55 பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விவரம்.

| | |
|---|---|
| 1981 ஆம் ஆண்டு தண்டிக்கப்பட்டவர்கள் .. .. | 44 |
| 1982 ஆம் ஆண்டு தண்டிக்கப்பட்டவர்கள் .. .. | 11 |
| மொத்தம் .. | 55 |

### முதுகுளத்தூரிலுள்ள ஆதி திராவிடர் மாணவர் இல்லத்தின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற் குறிப்பு

137—வினா எண். 17400—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூரில் ஆதி திராவிடர் நலத்துறையின்கீழ் நடைபெறும் மாணவர் இல்லத்தில் மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இதனை மேலும் உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—

(அ) முதுகுளத்தூரில் உள்ள ஆதி திராவிடர் விடுதி மாணவர்களின் எண்ணிக்கை 131.

(ஆ) இதனை மேலும் உயர்த்தும் உத்தேசம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

### திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பட்டம் பெற்ற ஆதி திராவிடர்களிடமிருந்து தொழில் நடத்த கடன் கோரி அனுப்பப்பட்ட மனுக்கள்

138—வினா 17462—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஆதி திராவிடர் வகுப்பினர் படித்து பட்டம் பெற்றவர் தொழில் நடத்தக் கடன் கோரி அனுப்பப்பட்ட மனுக்கள் 1981–82, 1983 சனவரி மாதம் வரை எத்தனை ?



1984 அக்டோபர் 15]

விடை—

வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம், படித்து பட்டம் பெற்ற ஆதி திராவிடர் வகுப்பினரிடமிருந்து சிறுதொழில் கடன் கோரி வரப்பெற்ற மனுக்கள் கடன் வழங்கப்பட்ட மனுக்கள் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | வரப்பெற்ற கடன் மனுக்கள் எண்ணிக்கை. | கடன் வழங்கப் பட்ட மனுக்கள் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூ. |
| 1981–82 | .. | .. | .. |
| 1983 ஜனவரி முடிய | 1 | 1 | 3,000 |

### வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து வரும் நல்ல மகசூல் தரும் மாமரங்கள்

139—வினா 17495—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நல்ல மகசூல் கொடுக்கும் மாமரங்களை வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் உயர் விளைச்சல் ரகமாகவும், நல்ல தரமுள்ள வகையாகவும், மாமரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதனுடைய மகசூல் மற்றும் பழத்தின் தன்மைகள் ஊர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றது. இதைத் தவிர இனச் சேர்க்கை மூலமாக புதிய வகைகளை உருவாக்கும் ஆராய்ச்சியும் நடைபெற்று வருகிறது.

பையூரிலுள்ள மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் கருக்கன்சாவடி என்னும் ஊரில் ஒரு உயர் விளைச்சல் "ருமானி" மாமரம் கண்டுபிடிக்கப்பட்டு, அதன்மீது ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இது தவிர மற்ற மாமரங்களும் இந்நிலையத்தில் ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வடாற்காடு காங்கேயநல்லூருக்கு பாலாற்றில் கிணறு வெட்டி குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு

140—வினா 17611—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் காங்கேயநல்லூரில் குடிதண்ணீர் பற்றாக் குறையை நீக்க பாலாற்றில் புதிய கிணறு அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

(இ) உத்தேச மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : " காங்கேயநல்லூர் மற்றும் காந்தி நூற்றாண்டு காலனி குடியிருப்புகளுக்கு ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. திட்டம் செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தால், அதை நிறைவேற்றுவது பற்றி முடிவெடுக்கப்படும். உறுதியான திட்ட மதிப்பீடு செயலாக்க ஆகும் கால விளைவு பற்றிய விவரம் அந்த நேரத்தில் தெரிய வரும்.

வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் கிளை நூலகங்கள்

141—வினா 17622—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிளை நூலகங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை நூலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 807.

ஆதிதிராவிடர் வீட்டு வசதி முன்னேற்றக் கழகத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள்

142—வினா 17640—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1980–81 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் வீட்டு வசதி முன்னேற்றக் கழகத்தின் மூலம் (HUDCO) கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எத்தனை



விடை—

தமிழகத்தில் 1980–81 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் வீட்டு வசதி முன்னேற்றக் கழகத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1,692.

மரக்காணம் ஒன்றியம் எரையானூர் மதுரா எடையன்குளம் கிராமத்தில் உள்ள குளத்தை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு

143 வினா 17716—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி மரக்காணம் ஒன்றியம் எரையானூர் மதுரா எடையன்குளம் கிராமத்தில் உள்ள குளத்தை ஆழப்படுத்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

விடை—

மேற்கூறப்பட்ட குளத்தை ஆழப்படுத்த 1983–84 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

மரக்காணம் ஒன்றியம் ஜக்காம்பேட்டை கிராமத்தில் கொசு ஒழிப்பு நடவடிக்கை

144—வினா 17734—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் மரக்காணம் ஒன்றியம் ஜக்காம்பேட்டை கிராமத்தில் கொசு ஒழிப்பு நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மரக்காணம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள ஜக்காம்பேட்டை கிராமம், சிதம்பரம் தேசிய யானைக்கால் நோய் தடுப்புப் பகுதியின் கீழ் வருகிறது. சிதம்பரம் யானைக்கால் நோய் தடுப்பு பகுதி அலுவலரை இக்கிராமத்தை ஆய்வு செய்து ஆய்வு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆய்வுக்குப்பின், தேவைப்படின் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[1984 அக்டோபர் 15

மரக்காணம் ஒன்றியம் ஆத்தூர்—விட்டலாபுரம் சாலையை கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யும் செயற் குறிப்பு

145—வினா 17674—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், ஆத்தூர்—விட்டலாபுரம் சாலையை கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திண்டிவனம் வட்டம் சிங்கனூரில் ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிக்கு கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்கும் திட்டம்

146—வினா 17738 திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம் சிங்கனூரில் உள்ள ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு கூடுதலாக இரு ஆசிரியர்களை நியமிக்க அரசு அனுமதிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படுவர் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 1983-84-க்கான கல்வியாண்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்குக் கூடுதலாக 100 இடைநிலை ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்த ஏற்கனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இப்பதவிகள் கூடுதலாக இடைநிலை ஆசிரியர் தேவைப்படக்கூடிய பள்ளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். சிங்கனூர் ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு கூடுதலாக ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை பரிசீலித்து தேவைப்படுமாயின் அப்பள்ளிக்கு மேற்கண்ட ஆசிரியர் பதவிகளிலிருந்து சிலவற்றை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.





திண்டிவனம் வட்டம் தென்பசார் கிராம காலனிக்கு வானொலிப்பெட்டி வழங்கும் செயற்குறிப்பு

147—வினா 17749—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், தென்பசார் கிராம காலனிக்கு வானொலி நிலையம் அமைத்து வானொலிப்பெட்டி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தென்பசார் ஆதிதிராவிடர் காலனி மக்களிடமிருந்து தமது காலனிக்கு வானொலி வழங்கக் கோரிய கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. எனினும், திண்டிவனம் வட்டம் தென்பசார் ஆதிதிராவிடர் காலனிக்கு வானொலி வழங்க மரக்காணம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பரமக்குடி, நயினார்கோயில் ஆகிய இடங்களில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதி

148—வினா 17829—திரு. ஆர். தவசி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(1) பரமக்குடி, (2) நயினார் கோயில் ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டிட வேலை எப்போது ஆரம்பமாகும் ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் நயினார் கோவிலில் மாணவர் விடுதி கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் இது பற்றிய செயற்குறிப்புகளை அம்மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலரை அனுப்பிவைக்கும்படி, இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்கள் கோரியுள்ளார்.

தர்மபுரி மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலையின் இருபுறமும் நடப்பட்ட பனை மரங்கள்

149—வினா 17913—திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை மூலம் 1981–82, 1982–83 ஆகிய ஆண்டுகளில் சாலையின் இரண்டு பக்கங்களிலும் பனை மரங்கள் நடப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மரங்கள் நடப்பட்டன ?

(இ) செலவழித்த தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1981–82ல், 3,81,000 பனை மரங்களும், 1982–83-ல் 5,54,500 பனை மரங்களும் நடப்பட்டன.

(இ) 1981–82-ல் செலவு ரூ. 54,903, 1982-83ல் செலவு ரூ. 30,042.

பழனி தேவஸ்தானத்திற்கு நியமிக்கப்படும் அறங்காவலர் குழு

150—வினா 17978—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தேவஸ்தானத்திற்கு அறங்காவலர் குழு நியமிப்பதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணம் என்ன ?

(ஆ) மேற்படி குழுவுக்கு விண்ணப்பித்து நேர்முக தேர்வு முடிந்து பல மாதம் ஆகியுள்ளதாக கூறுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாக பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி, சுவாமி ஆலயம் விளங்குகிறது. ஆகவே, அவ்வாலயத்தை செம்மையாக நிர்வாகிக்கத் தகுந்த நபர்களை தேர்ந்தெடுத்து அறங்காவலர்களாகப் பதவியிலமர்த்த அரசு பரிசீலித்து வருகிறது. எனவே இதில் காலதாமதம் என்ற கேள்வி எழவில்லை.

(ஆ) 1959 ஆம் ஆண்டின் இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் பிரிவு 26(1)-ல் கூறப்பட்டுள்ள தகுதிக் குறைபாடுகள் இல்லாத நபர்கள் மட்டுமே அறங்காவலர்களாகப் பதவியில் அமர்த்தப்படும் தகுதியுடையவர்கள் ஆவார்கள். பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தின் அறங்காவலர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளவர்களுக்கு சட்டப் பிரிவு 26 (1)-ன் கீழ் கூறப்பட்டுள்ள தகுதிக் குறைபாடுகள் இல்லாதிருக்கிறார்களா என்பதற்கு மட்டுமே மதுரை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் விசாரணை நடத்தியிருக்கிறார். அவ்விசாரணையை நேர்முகத் தேர்வு எனக் கருதலாகாது.

(இ) இவ்வினா எழ இடமில்லை.



திருவண்ணாமலையிலிருந்து தானிப்பாடி மற்றும் கீழ்வண்ணக்கம்பாடி ஆகிய கிராமங்களுக்கு நகரப் பேருந்து விடும் செயற் குறிப்பு

151—வினா 18026—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் இருந்து தானிப்பாடி மற்றும் கீழ்வண்ணக்கம்பாடி கிராமங்களுக்கு நகர பேருந்துவிட போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

திருவண்ணாமலையில் இருந்து தானிப்பாடி மற்றும் கீழ்வண்ணக்கம்பாடி கிராமங்களுக்கு நகர பேருந்து விடும் திட்டம் தற்பொழுது பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திடம் இல்லை.

மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ள இடத்தை அழகுப்படுத்தும் செயற்குறிப்பு

152—வினா 18077—திரு ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு, உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ள இடத்தை அழகுபடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ள இடம் சிறிய பூங்காவாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனை மேலும் அழகுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கண்கவரும் நிறமுள்ள குரோட்டன்ஸ் செடிகள் மற்றும் மலர்ந்த காட்சி தரும் முசாண்டா செடிகள் ஆகியவை இச்சிறிய இடத்தில். போதுமான அளவிற்கு வைக்கப்படும், மேலும் இவ்விடத்தைச் சுற்றியுள்ள சுவர், இரும்புச் சட்டம் ஆகியவற்றிற்கு புதிதாக வர்ணம் பூசப்படும்.

[1984 அக்டோபர் 16

குடவாசல் ஒன்றியம் நெம்மேலியைச் சார்ந்த மான்கண்டமூலை கிராமத்திற்கு சாலை வசதி செய்து தரும் திட்டம்

153—வினா 18086—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் நெம்மேலி ஊராட்சியைச் சார்ந்த மான்கண்ட மூலை கிராமத்திற்கு சாலை வசதியில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) மான்கண்ட மூலையிலிருந்து குலக்குடி கிராமம் வரை உள்ள தூரம் 420 மீட்டர். இதில் 220 மீட்டர் குடவாசல் ஊராட்சி ஒன்றிய சாலையிலும் மீதமுள்ள 200 மீட்டர் நன்னிலம் ஊராட்சி ஒன்றிய எல்லையிலும் உள்ளது. முதலில் கூறப்பட்ட சாலைப் பகுதியை அமைக்க நிலச் சுவான்தாரர்களை நேரில் சந்தித்து நிலங்களை வாங்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது. மீதமுள்ள 200 மீட்டர் தூரச் சாலையை வசதி செய்ய நன்னிலம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கும் நாகப்பட்டினம் கோட்ட வளர்ச்சி அலுவலருக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டம் ஓமலூர்—தாரமங்கலம் தார் சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு

154—வினா 18193—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சத்துணவு திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலம் மாவட்டம் ஓமலூர்-தாரமங்கலம் தார் சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை —

வினாவில் குறிப்பிடப்பட்ட சாலையின் மொத்த நீளம் 10.6 கி.மீ. இதில் நகர எல்லைக்குட்பட்ட 2.0 கி.மீ. நீளமுள்ள பகுதி அகலப்படுத்தப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 8.60 கி.மீ. பகுதியை இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதிவளம், மற்றும் வேலையில் முக்கியத்துவம் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு அகலப்படுத்துவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.



1984 அக்டோபர் 15]

காஞ்சிபுரம் வட்டம் ஐயன்பேட்டையில் நியாய விலை கடை திறக்கும் செயற்குறிப்பு

155—வினா 18259—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சிபுரம் வட்டம் ஐயன்பேட்டையில் கிராம நியாய விலைக்கடை திறக்க பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில் அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) காஞ்சிபுரம் வட்டம் ஐயன்பேட்டை ஒரு தனி வருவாய் கிராமம், இந்த கிராமத்திலேயே 1981 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் ஒரு முழு நேர கிராம அங்காடி செயல்பட்டு வருகின்றது. இந்த அங்காடியினை முத்தியால்பேட்டை கூட்டுறவு விவசாய சேவை சங்கம் நடத்தி வருகின்றது. ஐயன்பேட்டையில் உள்ள 1318 குடும்ப அட்டைகளுக்கும் இந்த அங்காடியின் மூலம் கட்டுப்பாட்டுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. புதிய கடைகள் திறக்க பொது மக்களின் கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) பதில் எழவில்லை.

முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து சென்னை அடையாறு டிரான்ஸ்பார்மர் அண்ட் சுவிட்ச்கியர் கம்பெனி தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் செயற்குறிப்பு

156—வினா 18337—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அடையாறு டிரான்ஸ்பார்மர் அண்டு சுவிட்ச்கியர் லிமிடெட் என்ற கம்பெனி, கடந்த 1½ ஆண்டுகளாக லே-ஆப்பில் உள்ளதால் அத்தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படுமா?

விடை—

சென்னை, அடையாறு டிரான்ஸ்பார்மர் அண்டு சுவிட்ச்கியர் லிமிடெட் என்ற கம்பெனியில் பணிபுரிந்த 220 தொழிலாளர்களுக்கு, தலா ரூ. 250 வீதம் மொத்த நிவாரணம் ரூ. 55,000 முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 11-4-1983 தேதியிட்ட அரசாணைப்படி அணையிடப்பட்டது. 216 தொழிலாளர்கள் மேற்கண்ட நிவாரணத் தொகையைப் பெற்றுக் கொண்டனர். இதர மூன்று தொழிலாளர்கள் ராஜினாமா செய்ததாலும், ஒருவர் வெளி நாடு சென்றுள்ளதாலும் மீதமுள்ள ரூ. 1,000 அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

## கிண்டி ராஜ்பவனில் உள்ள காடுகளில் உள்ள மான்கள் இரவில் லாரியில் அடிபடாமல் இருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை

157—வினா 18549—திரு. சி. செல்லப்பிரகாசம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி ராஜ்பவனில் உள்ள காடுகளில் உள்ள மான்கள் இரவில் பஸ், லாரி போன்ற வாகனங்களில் அடிபடுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) அதை தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

(அ) ஆம்

(ஆ) இம்மாதிரியான விபத்துக்களைத் தவிர்க்க,கீழ்காணும் முன் எச்சரிக்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன:—

(1) சாலையில் முக்கிய இடங்களில் மான்கள் சாலையைக் கடப்பது போன்ற படங்கள் வைக்கப்பட்டுள்ளன,

(2) தற்போது மதில் சுவர்கள் கட்டப்பட்டு, மான்களை ராஜ்பவனம் காட்டுக்குள்ளேயே வைத்து இருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மதில் சுவர் கட்டும் வேலை முடிந்த பின்பு அநேகமாக இவ்வித விபத்துக்கள் ஏற்படாது.

(3) மான்களைக் காட்டிற்கு உள்ளேயே வைத்திருக்க அதற்கு தேவையான உணவும், தண்ணீரும் அவைகள் எளிதில் பார்க்கும் இடங்களில் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

## ஈரோட்டில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள்

158—வினா 18599—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பொது பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் ஈரோட்டில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ள மனையிடங்கள் (பிளாட்) கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் மொத்தம் எவ்வளவு?

விடை—

வீட்டு வசதி வாரியம் ஈரோட்டில் ஒதுக்கிய மொத்த மனையிடங்கள் 96.



1. குறைந்த வருவாயினருக்கான வீட்டு வசதி திட்டம்.

இத் திட்டத்தின் கீழ் பெரியார் நகரில் 518 வீடுகள் பொது மக்களுக்காகவும் 44 வீடுகள் ஆசிரியர்களுக்காகவும் கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளன.

2. நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் ஈரோடு பெரியார் நகரில் 64 வீடுகளும் 136 குடியிருப்புகளும், உயர் வருவாயினருக்காக 50 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

3. தமிழக அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் மாவட்ட முன்சீப் (District Munsiff) கூடுதல் மாவட்ட முன்சீப் (Addtional District Munsiff) துணை கோட்டாட்சி மாஜிஸ்டிரேட், தொழிலாளர் நல அதிகாரி மற்றும் வருவாய் கோட்டாட்சி அலுவலர் ஆகியோருக்கு தலா ஒரு குடியிருப்பும் துணை நீதிபதிகளுக்கு இரண்டு குடியிருப்புகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் ஈரோடு மூலப் பாளையம் என்ற இடத்தில் 54 குடியிருப்புகளும், ஈரோடு பெரியார் நகரில் 168 குடியிருப்புகளும் பெருந்துறை சாலையின் 192 குடியிருப்புகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

4. குடிசை மாற்று அபிவிருத்தித் திட்டம்.

இந்த திட்டத்தின்கீழ் 103·40 இலட்சம் மதிப்பீட்டில் 400 வீடுகள் பெரும்பள்ளம் ஓடையில் கட்டப்பட்டு வருகிறது.

5. காவலர் குடியிருப்புத் திட்டம்.

இந்தத் திட்டத்தின்கீழ் பூத்துறை ரோடு, ஈரோடில் ரூ. 13·08 இலட்சம் மதிப்பீட்டில் 36 குடியிருப்புகளும், 24 அங்காடிகளும் கட்டு முடிக்கப்பட்டு காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## பெருந்துறை வட்டம், பாண்டியம்பாளையம் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா செய்து கொடுக்கும் செயற் குறிப்பு

159—வினா 18659—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை வட்டம் பாண்டியம்பாளையம் கிராமத்திலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு பட்டாக் கொடுக்கப்பட்டுள்ளதா?

[1984 அக்டோபர் 15

விடை—

பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டம், திங்களூர் உள்வட்டம் பாண்டியம்பாளையம் கிராமத்தில் உள்ள ஆதி இந்து குடிகளுக்கு 1980-ஆம் ஆண்டில் 30 (முப்பது) வீட்டுமனைப் பட்டாக்களும் 1981 ஆம் ஆண்டில் 23 (இருபத்து மூன்று) வீட்டு மனைப்பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

## திருமங்கலம் தொகுதி நேசநேரியின் அருகே ஓடையின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்

160—வினா 18688—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நேசநேரிக்குப் போகும் வழியில் உள்ள ஓடையின் குறுக்கே பாலம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது.

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சிறு பாலம் கட்ட 'தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்' கீழ் ரூ. 30,000க்கு மதிப்பீடு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி வெகு விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

## 1983 மார்ச் முடிய கறவை மாடுகள் வாங்க மகளிர் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை.

161—வினா 18706—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சங்கங்களுக்கு 1983 மார்ச் முடிய கறவை மாடுகள் வாங்க அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது ?

(ஆ) அதில் எத்தனை மகளிர் சங்க உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர் ?

(இ) அதில் ஆதிதிராவிட பழங்குடியினர் எத்தனை பேர்கள் ?



1984 அக்டோபர் 15]

விடை—

(அ) 1973-74ம் ஆண்டிலிருந்து 1983 மார்ச் முடிய கறவை மாடுகள் வாங்க மத்திய சமூக நல வாரியம் ரூ. 92,35,770 ஒதுக்கியுள்ளது. கறவை மாடுகள் வாங்க தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு சமூகநல வாரியம் தொகை எதுவும் ஒதுக்கவில்லை.

(ஆ) மேற்கண்ட ஒதுக்கீடு அனைத்துமே மகளிர் மன்றங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டது. இதுவரை 2,370 உறுப்பினர்கள் பயன் அடைந்துள்ளனர்.

(இ) பயனடைந்த ஆதிதிராவிட பழங்குடியினர் எத்தனை பேர் என்று தனியே விபரங்கள் இல்லை.

## பெரமண்டூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா செய்து தரும் செயற்குறிப்பு.

162—வினா 18780—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், பெரமண்டூர் கிராம ஆதி திராவிட மக்கள் சீர்திருத்தம் செய்து அனுபவித்து வரும் புறம்போக்கு நிலங்களை அவர்கட்கு பட்டா செய்து தர வேண்டும் என கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திண்டிவனம் வட்டம், பெரமண்டூர் கிராமத்தில் ஆதிதிராவிட மக்களால் தரிசு நிலத்தை பட்டா கோரி மனு எதுவும் வரவில்லை. மனுக்கள் எதுவும் நிலுவையில் இல்லை.

## தென் ஆற்காடு மாவட்டத்தில் தாட்கோ மூலம் கட்டப்பட்ட வீடுகள்.

163—வினா 18806—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் 1980–81, 1981-82, 1982-83 ஆண்டுகளில் தாட்கோ மூலம் வீடு கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? தொகுதி வாரியாக ?

(ஆ) அதில் எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது ?

விடை—

(அ) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு தொகுதி வாரியாகவோ, மாவட்ட வாரியாகவோ நிதி ஒதுக்கப் படுவதில்லை. நிதிநிலை அறிக்கைகளில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | | | | ஒதுக்கப்பட்ட நிதி. |
|---|---|---|---|---|
| 1980–81 | .. | .. | .. | ரூ. 220 இலட்சம். |
| 1981–82 | .. | .. | .. | ரூ. 200 இலட்சம். |
| 1982–83 | .. | .. | .. | ரூ. 200 இலட்சம். |

(ஆ) ஆதிதிராவிடர்களுக்கு கட்டப்படும் வீடுகளின் மதிப் பீட்டுச் செலவினை உயர்த்தும் கொள்கை முடிவினை எதிர் நோக்கி 1980-81-லிருந்து 1982 நவம்பர் வரை ஆதிதிராவிடர் களுக்கு வீடுகள் கட்டுவது சாத்தியமில்லாது போயிற்று. 1982 நவம்பர் முதல் இத்திட்டம் அரசு மான்யம் மற்றும் பயன்பெறு வோர் பயன்பெறுவோரின் சொந்த உழைப்பின் அடிப்படையில் தாமே வீடுகளை ரூ. 4,000 மதிப்பீட்டுச் செலவில் கட்டிக்கொள்ள வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது.

## திண்டிவனம் வட்டம் சிங்கனூரில் ஆதி திராவிட நல மாணவிகள் விடுதிக்குப் புறச்சுவர் கட்டும் செயற்குறிப்பு.

164—வினா 18810—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் (சட்டமன்ற) தொகுதி சிங்கனூரில் உள்ள அரசாங்க ஆதிதிராவிட நல மாணவிகள் விடுதிக்குப் புறச்சுவர் இல்லாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், சிங்கனூரில் ஆதிதிராவிடர் நலத்துறையால் நடத்தப் பெறும் மகளிர் விடுதி, ஏதும் தற்சமயம் இயங்கவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



## நிலக்கோட்டைத் தொகுதி பள்ளப்பட்டி அகரம் கண்மாய்க்கு தண்ணீர் வராததன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை.

165—வினா 18840—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டைத் தொகுதி, பள்ளப்பட்டி அகரம் கண்மாய்க்கு வரும் வரத்துக் கால்வாய் உடைப்பு எடுத்து சரியாக தண்ணீர் கண்மாய்க்கு வருவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): பள்ளப்பட்டி அகரம் கண்மாய்க்கு வரும் வரத்து வாய்க்காலில் எவ்வித உடைப்பும் ஏற்படவில்லை. இந்த கண்மாய்க்கு வரும் பாம்பாறு என்கிற காட்டு ஓடையில் பஞ்சாயத்து யூனியனால் கட்டப்பட்ட வெள்ளப்போக்கிற்கு அடுத்து உடைப்பு ஏற்பட்டது. கிராமத்திலுள்ள ஆயக்கட்டுக் காரர்கள் மேற்படி உடைப்பைப் பற்றி பஞ்சாயத்து யூனியனிடமே தெரிவித்துள்ளனர். இருப்பினும், ஆலோசனை கூட்டுக் குழு கூட்டத்தில் எழுப்பிய புகார்படி, இத்துறையினரே மேற்படி உடைப்பை அடைத்து விட்டனர்.

## விருத்தாசலம் நகராட்சியிலுள்ள சித்தனூர் காலனி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு.

166—வினா 18851—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

விருத்தாசலம் நகராட்சியிலுள்ள சித்தனூர் காலனி மக்க ளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

விருத்தாசலம் வட்டம் மற்றும் நகரத்திலுள்ள சித்தனூர் காலனி மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கென 4(1) முன் மொழிவுகளை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை தென்னாற் காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொண்டுள்ளார். அவரது அறிக்கை கிடைக்கப்பெற்றபின் அரசு ஆவன செய்யும்.

[1984 அக்டோபர்

## சேத்துப்பட்டுப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி.

167—வினா 18894—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"சென்னை சேத்துப்பட்டு பகுதியிலுள்ள தீயால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வீடு கட்ட' நிதி கோரி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

விடை—

ஆம். இந்த கோரிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சேத்துப்பட்டு பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டிக் கொள்வதற்கு கடன் வழங்கும் பொருட்டு அரசு தனது ஆணை (நிலை) எண். 1512, வருவாய் துறை நாள்: 2—7—81-ல் ரூ. 2,84,000 தற்காலிகக் கடனாக வழங்க உத்திர விட்டது. இங்கு வசித்து வந்த மக்கள் நிலத்திற்குச் சொந்தக்கார ராக அல்லாததினால், கடனாக வழங்கப்படும் தொகையை இவர் களிடம் திரும்ப வசூல் செய்ய இயலாது என கருதப்பட்டு கடன் தொகை வழங்கப்படவில்லை. எனினும் தீ விபத்தினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ. 200 ரொக்கப்பண மாகவும் துணி, கெரசின், அரிசி போன்றவைகளும் உடனடியாக வழங்கப்பட்டன.

2. இங்கு வசித்து வரும் மக்களுக்கு உலக வங்கித் திட்டம் பாகம் 2-ன்கீழ், குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக இப்பகுதியினை மேம்படுத்தி நில உரிமையும், கடனுதவியும் வழங்குமாறு அரசு, தனது ஆணை எண். 1887, வருவாய்துறை, நாள்: 20—11—82-ல் உத்திரவிட்டுள்ளது. இதில் ஏம்.எஸ். நகர் குடிசைப் பகுதியில் உள்ள மாநகராட்சி (பொது)க்குச் சொந்த மான நிலத்தில் ரூ. 4.33 இலட்சங்கள் செலவில் அபிவிருத்தி பணிகள் வாரியம் தொடங்கவிருக்கிறது.

## கட்டிட வசதியில்லாத ஓராசிரியர் பள்ளிகள்.

168—வினா 18903—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஓராசிரியர் மூலம் நடைபெறும் பள்ளி கள் எத்தனை?

(ஆ) மேற்படி பள்ளிகளில் சொந்த கட்டிடமில்லாத பள்ளிகள் எத்தனை?



1984 அக்டோபர் 15]

விடை—

(அ) 1982-83-ம் கல்வியாண்டில் தமிழகத்திலுள்ள ஓராசிரியர் பள்ளிகள் 2,709 ஆகும்.

(ஆ) 2,709 ஓராசிரியர் பள்ளிகளில் சொந்தக் கட்டிட மில்லாத பள்ளிகள் 253 ஆகும். இவைகள் வாடகைக் கட்டிடம் கோயில் கட்டிடம், சத்திரம் மற்றும் தனியார் கட்டிடம் போன்ற வற்றில் நடைபெற்று வருகின்றன.

## மதுரை மாநகராட்சி கே. கே. நகரில் பஸ் நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.

169—வினா 18969—திரு. அ. பாலுச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரை மாநகராட்சியில் மேலும் ஒரு பஸ் நிலையம் கே. கே. நகரில் ஆரம்பிக்கும் திட்டம் உண்டா?

விடை—இல்லை.

## திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தமிழ்நாடு தியேட்டருக்கு எதிரில் இருக்கும் அங்காடியை விரிவாக்கும் திட்டம்.

170—வினா 19032—திரு. கோ. ராஜசேகரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை தமிழ்நாடு தியேட்டருக்கு எதிரில் இருக்கும் அங்காடி (Market) இப்போது உள்ள மக்கள் நெருக்கத்திற்கு ஏற்ப போதுமான வசதியுடன் இல்லை என் பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதனை விரிவாக்கவோ அல்லது புது அங்காடி அமைக்கவோ அரசு முன் வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): மேலே குறிப்பிடப்பெறும் அங்காடி ஓரளவு நெரிசலாக உள்ளது என்பது உண்மை, ஆயினும் அதன் அருகில் தகுந்த இடம் கிடைக்காததால் அப்பகுதியில் அதனை விரிவாக்கவோ அல்லது புதிய அங்காடி அமைக்கவோ சென்னை மாநகராட்சிக்கு எண்ணம் இல்லை.

### அரசுப் பணியிலிருக்கும்போது இறந்தோரின் வாரிசுதாரர்களுக்கு அளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு.

171—வினா 19062—திரு. ப. பொன்னுரங்கம், திரு. வே. ராஜசேகரன் : மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுப் பணிகளில் இருக்கும் பொழுதே மரணம் அடைந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில் 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டு 593 நபர்களும் 1982-83 ஆம் ஆண்டு 631 நபர்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட இளைஞர் சுய வேலை வாய்ப்பு பயிற்சியின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள்.

172—வினா 19081—திரு. சிந. சிதம்பரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இளைஞர்கள் சுயவேலை பயிற்சி (டிரைசம்)யில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1981-82, 1982-83 ஆம் ஆண்டுகளில் எத்தகைய பயிற்சிகள் அளிக்கப்பட்டன?

(ஆ) பயிற்சி அளிக்கப்பட்டவர்களில் ஆண்கள், பெண்கள் எத்தனை பேர்?

(இ) இதுவரை சுயவேலை பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?





விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1979-80 முதல் 1982—83-ம் ஆண்டு வரை, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட இளைஞர் சுய வேலைவாய்ப்பு பயிற்சியின்கீழ், அமைக்கப்பட்டுள்ள பட்டியலின்படி 31 தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு மாதம் முதல் ஆறு மாதம் வரை தொழிலுக்கு ஏற்றார் போல் பயிற்சி அளித்த பின்னர், பயிற்சி முடிவில் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குத் தேவையான தொழிற் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டு, பயிற்சி பெற்ற தொழிலை செய்து வருகின்றனர்.

(ஆ) இம்மாவட்டத்தில் 7,410 பெண்களும், 1,757 ஆண்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

(இ) சுய வேலை பயிற்சி பெற்ற மொத்தம் 9,167 நபர்களில் 8,996 நபர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர். @ விவரப்புட்டியல் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

### மணப்பாறை தாலுக்காவை கரூர் வருவாய் கோட்டத்திலிருந்து திருச்சி வருவாய்க் கோட்டத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு

173—வினா 19132— திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுக்காவை கரூர் வருவாய் கோட்டத்திலிருந்து திருச்சி வருவாய் கோட்டத்திற்கு மாற்றித்தருமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றதா?

(ஆ) ஆம், எனில், அதன்பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ;

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

### தஞ்சையில் சுற்றுலா அலுவலகம் துவக்கும் செயற்குறிப்பு

174—வினா 19186— திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் சுற்றுலா அலுவலகம் துவக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்.?

---

@ 598—599ம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

விடை—

(அ) இல்லை. ஆனால் சுற்றுலா தகவலகம் திறக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

### திருத்துறைப்பூண்டி நகரில் சப்-கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு

175—வினா 19197—திரு. எம். எஸ். மாணிக்கம் ; மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்துறைபூண்டி நகரில் சப்-கோர்ட் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தற்பொழுது திருத்துறைப்பூண்டி நகரில் ஒரு சப்-கோர்ட் அமைக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

### திருச்செந்தூர் தொகுதி தண்டபத்து கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு சாலை வசதி செய்துதரும் திட்டம்

176—வினா 19265—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதியில் உள்ள தண்டபத்து கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு சாலை வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அம் மக்களுக்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

(அ) தண்டபத்து கிராமம் ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு சாலை வசதி உள்ளது. அச்சாலையை ஊராட்சி ஒன்றியம் சீர் செய்துள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



### விழுப்புரம் வட்டம் அன்னியூரில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு.

177—வினா 19339—திரு. ஆர். சுந்தரமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், அன்னியூரில் சார் பதிவாளர் (Sub-Registrar) அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை. நிதி நிலையை கருத்தில் கொண்டு பகுதி-2 திட்டத்தில் இது பரிசீலிக்கப்படும்.

### சங்கரன்கோவில் வட்டம் வீரசிகாமணியில் கிளை நூல் நிலையம் நிறுவும் செயற்குறிப்பு.

178—வினா 19434—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம் வீரசிகாமணி ஊரில் நூல் நிலையம் நிறுவும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) வீரசிகாமணி கிளை நூலகம் 1958 ஆம் ஆண்டிலேயே திறக்கப்பட்டுள்ளது.

(ஆ) வீரசிகாமணி கிளை நூலகம் 27-3-1958-ல் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திறக்கப்பட்டு நூலக ஆணைக் குழுவிற்கு சொந்தமான கட்டிடத்தில் தற்போது "டி" கிரேடு நூலகமாக இயங்கி வருகிறது.

[1984 அக்டோபர் 15

## சமூகநலத் துறையின் மூலம் கொல்லி மலையில் உள்ள பழங்குடி மக்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

179—வினா 19453—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் சமூக நலத்துறை மூலம் பழங்குடி மக்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் என்ன என்ன?

(ஆ) செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் பயனடையும் மலை வாழ் மக்கள் எத்தனை பேர்கள், குழந்தைகள் எத்தனை பேர்கள்?

(இ) புதிய திட்டங்கள் ஏதாவது மலைவாழ் மக்களுக்கு செயல்படுத்த அரசுக்கு எண்ணமுண்டா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கொல்லிமலையில் சமூக நலத்துறை மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்களும் பயனடைந்தோர் விவரமும் கீழே தரப்பட்டுள்ளன :—

| நிறைவேற்றப்பட்ட திட்டங்கள். (1) | பயனடைந்தோர். (2) |
|---|---|
| **விவசாயம் :** | |
| விதைகள் பழச்செடி, உரம் வழங்குதல், பயிர் பாதுகாப்பு, தனியார் பழத் தோட்டம், உழவர்களுக்கு பயிற்சி, சுற்றுலா போன்ற திட்டங்கள். | 1,304 குடும்பத்தினர். |
| **கால்நடை பராமரிப்பு:—** | |
| கறவை மாடுகள், உழவு மாடுகள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், கன்று விநியோகம், நடமாடும் கால் நடை மருத்துவமனை அமைத்தல். | 105 குடும்பத்தினர். |
| சிறு பாசனத் திட்டம் .. .. | 6 திட்டங்கள். |
| கிராமங்களுக்கு குடிநீர் வசதியளித்தல் | 1,650 குடும்பங்கள். |
| மருத்துவமனைகள் ஏற்படுத்துதல் .. | 5,000 குடும்பங்கள் பயனடைய வாய்ப்புள்ளது. |
| பாலர் பள்ளி அமைத்தல் .. .. | 40 குழந்தைகள். |
| தேனீ வளர்ப்புப் பெட்டி வழங்குதல். | 40 குடும்பங்கள். |
| சாலை வசதியளித்தல் .. .. | 3 சாலைகள். |



1984 அக்டோபர் 15]

| நிறைவேற்றப்பட்ட திட்டங்கள். (1) | பயனடைந்தோர். (2) |
|---|---|
| **கூட்டுறவு—** | |
| நீண்டகால, குறுகிய காலகடன்கள், அளித்தல். | சோழக்காடு, செம்மேடு கிராமங்களில் கிராம அங்காடிகளுக்கான கட்டிடங்கள் கட்டுதல். |
| மின் வசதியளித்தல் .. .. | 10 கிராமங்கள். |
| பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் .. | 50 குடும்பங்கள். |

(இ) ஆம், கொல்லி மலையை சுற்றுலாத் தலமாக்க அருள்மிகு அரப்பளீஸ்வரர் கோவிலிலிருந்து ஆகாச கங்கை வரை தார் சாலை அமைக்கவும், தங்கும் வசதி செய்தல், சிறிய பூங்கா மற்றும் வன விலங்கு காட்சிக் கூடம் அமைத்தல், இரண்டு தொலை நோக்குக் கருவிகள் நிறுவுதல், மருத்துவ மனைக்குச் செல்ல ஆம்புலன்ஸ் வழங்குதல், இலவச மருத்துவ முகாம் நடத்துதல், கல்வி, சுற்றுலா, லேம்ப் சொசைட்டி மூலம் புதிய சேமிப்புத் திட்டத்தை அமுல் படுத்துதல், மூலிகைப் பண்ணை அமைத்தல்.

## பழனிநகரில் இயங்கி வரும் மாவட்ட வேளாண்மை அலுவலகத்திற்குச் சொந்த கட்டிடம் கட்டுப் பொற்குறிப்பு

180—வினா 19608—திரு. எஸ். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனி நகரில் இயங்கி வரும் மாவட்ட வேளாண்மை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் இல்லையென்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்டத் திட்டம் உண்டா ?

விடை—

(அ) அறியும்.

(ஆ) பயிற்சி வழித் திட்டம், அமுலுக்கு வந்த பின்னர் மாவட்டத்தில் வாடகைக் கட்டிடங்களில் உள்ள அரசு அலுவலகங்களை சொந்தக் கட்டிடங்களுக்குக் கொண்டு வரும் உத்தேசம் உள்ளது. இதற்கு முதற்படியாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்து உள்ளது. தற்பொழுது பழனியில் இயங்கி வரும் உதவி வேளாண்மை அலுவலர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட திட்டம் இல்லை.

[1984 அக்டோபர் 15

### சென்னையில் இயங்கி வரும் கிளை நூலகங்கள்

181—வினா 19612—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இயங்கிவரும் கிளை நூலகங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றில் சொந்தக் கட்டிடங்களில் இயங்குபவை எத்தனை ?

விடை—

(அ) 107.

(ஆ) 35.

### திருநெல்வேலி மாவட்டம் படந்தபுளி கிராமத்தில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு

182—வினா 19664—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், படந்தபுளி என்ற கிராமத்தில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### வாலாஜா ஏரியை தூர் வாரும் திட்டம்

183—வினா 19683—திரு. ஏ. இராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், சேத்தியாத் தோப்பு ஆயக்கட்டுக்குட்பட்ட வாலாஜா ஏரியை முழுமையாக தூர் வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.



1984 அக்டோபர் 15]

### வத்திராயிருப்பில் வன விலங்கு சரணாலயம் அமைக்கும் திட்டம்

184—வினா 19756—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தித்துறை மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் வட்டம், வத்திராயிருப்பில் வனவிலங்கு புகலிடம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

கீழ்வரும் இடங்களைச் சேர்த்து மேகமலைச் சரணாலயம் என்று அமைப்பதற்கான கருத்துரு ஒன்று பரிசீலனையில் உள்ளது :

| | | ஹெக். |
|---|---|---|
| ஸ்ரீவில்லிபுத்தூர் | .. .. .. | 21,312.53 |
| சின்னமனூர் | .. .. .. .. | 13,530.88 |
| கடமலைக்குன்று | .. .. .. | 13,989.87 |
| கூடலூர் | .. .. .. .. | 9,563.56 |
| (மதுரை மாவட்டம்) | | |
| | | 58,396.84 |

இராமநாதபுரம், வனக் கோட்டத்தில் வத்திராயிருப்புக் காடு உள்ளது. வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர் பாதுகாப்புக் காட்டிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த ஸ்ரீவில்லிபுத்தூர் பாதுகாப்புக் காட்டை, உத்தேசிக்கப்பட்டுள்ள மேகமலைச் சரணாலயத்துடன் சேர்ப்பதற்கான பிரேரனைப் பரிசீலனையிலுள்ளது. வத்திராயிருப்பு பகுதியிலுள்ள மதுரை வனக் கோட்டத்தைச் சேர்ந்த சாப்டூர் பீட் 2 மற்றும் 3 ஆகிய காடுகளையும் சரணாலயத்துடன் சேர்க்க பரிசீலிக்கப்படுகிறது.

### கடல் ஆமைகளை வளர்க்க அரசு எடுத்துள்ள தீவிர நடவடிக்கைகள்.

185—வினா 19782—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தித்துறை மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல் ஆமைகளை வளர்க்க அரசு எடுத்துள்ள தீவிர நடவடிக்கைகள் யாவை?

விடை—

வேதாரண்யம் சரகத்தில், கோடியக்கரை, ஆற்காட்டுத்துறை, வனவன் மகாதேவி என்னும் மூன்று இடங்களில் குஞ்சு பொறிக்கும் இடங்கள் (Hatcheries) அமைக்கப்பட்டு, கடல் ஆமை முட்டைகளை கடற்கரையில் இருந்து சேகரித்து வந்து, குஞ்சு பொறிக்கும் இடங்களில் வைத்துப் பாதுகாத்து பின்னர் கடலில் விடப்படுகிறது. இத்திட்டம் அக்டோபர் 1982 முதல் மே 1983

[1984 அக்டோபர் 15

உடன் முடிந்த காலங்களில் செயல்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கை மூலம் கடல் ஆமை இனப்பெருக்கம் அதிகரிக்க ஏதுவாகிறது. இந்தப் பகுதியில் சேகரித்த முட்டைகள், குஞ்சு பொறிக்கும் பொருட்டு, மண்ணில் புதைத்து, அவைகளின் குஞ்சுகளானவைப் போன்ற விபரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

| குஞ்சு பொறிக்க வைத்திருக்கும் இடத்தின் பெயர். | சேகரித்த முட்டையின் எண்ணிக்கை. | குஞ்சு பொறித்தவைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கோடியக்கரை .. .. | 10,692 | 8,206 |
| 2. ஆற்காட்டுத்துறை .. | 8,683 | 6,368 |
| 3. வனவன் மகாதேவி .. | 10,717 | 8,964 |
| | 30,092 | 23,538 |

2. தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தவிர, இதர ஐந்து இடங்களில் கடற்கரையில் இருந்து ஆமை முட்டைகளை சேகரித்து, குஞ்சு பொறிக்கும் பொருட்டு மண்ணில் புதைத்து பாதுகாத்து, அவைகள் குஞ்சு பொறித்த பின்பு கடலில் விடப்பட்ட குஞ்சுகளின் விபரம் பின்வருமாறு :—

வனவிலங்கு காப்பாளர், சென்னை.—

| குஞ்சு பொறிக்க வைத்திருக்கும் இடத்தின் பெயர். | சேகரித்த முட்டையின் எண்ணிக்கை. | குஞ்சு பொறித்தவைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பெரிய நீலாங்கரை ... | 32,710 | 29,151 |
| 2. வட நெமிலி .. .. | 25,765 | 20,987 |
| | 58,475 | 50,138 |

வனவிலங்கு காப்பாளர், களக்காடு சரணாலயம், திருநெல்வேலி—

| | | |
|---|---|---|
| 1. வீரபாண்டியன் பட்டினம் .. | 4,993 | 1,601 |
| 2. கன்னியாகுமரி .. .. | 210 | 11 |
| 3. உவரி .. .. | 103 | 92 |
| | 5,306 | 1,704 |



1984 அக்டோபர் 15]

**திருவில்லிபுத்தூரில் ஒரு சார்பு நீதி மன்றம் அமைக்கும் செயற் குறிப்பு.**

186—வினா 19801—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

உள்துறை 27-6-1981 நாளிட்ட அரசு நிலையாணை எண்.1452-ன்படி திருவில்லிபுத்தூரில் ஒரு சார்பு நீதிமன்றம் 3-7-1981 முதல் இயங்கி வருகிறது.

**அரசு அச்சகத்தில் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி முடித்த பின்னர் வேலை கொடுக்கும் திட்டம்.**

187—வினா 19836—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு அச்சகத்தில் மூன்று ஆண்டுகள், இரண்டு ஆண்டுகள் பயிற்சி முடித்த பயிற்சியாளர்கள் 1982 டிசம்பர் முடிய எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு பயிற்சி முடித்தவுடன் வேலை கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், உடனடியாக வேலை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) தமிழக அரசு அச்சகத்தில் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 2 ஆண்டுகள் 3 ஆண்டுகள் பயிற்சியினை முடித்த பயிற்சியாளர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

[தேசிய தொழில் நுட்ப சான்றிதழ் பெற்ற தொழிற்பழுநருக்கு பயிற்சிக் காலத்தில் ஓராண்டு தள்ளுபடி சலுகை அளிக்கப்படுவதால் ஓராண்டு பயிற்சியாளர்களின் எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது.]

ஒரு ஆண்டு (தேசிய தொழில் நுட்ப சான்றிதழ் பெற்ற தொழில் பழகுநர்கள்).

| | |
|---|---|
| அ. கையச்சுக் கோர்ப்பவர் பயிற்சியாளர் .. | 3 |
| ஆ. புத்தகம் கட்டுபவர் பயிற்சியாளர் .. | 115 |
| | 118 |

[1984 அக்டோபர் 15

இரண்டு ஆண்டுகள் :

| | |
|---|---|
| அ. கையச்சுக் கோர்ப்பவர் பயிற்சியாளர் .. | 59 |
| ஆ. புத்தகம் கட்டுபவர் பயிற்சியாளர் .. | 126 |
| இ. மோனோ காஸ்டர் பயிற்சியாளர் .. | 1 |
| ஈ. தச்சர் பயிற்சியாளர் .. .. | 1 |
| | 187 |

மூன்று ஆண்டுகள் :

| | |
|---|---|
| அ. கையச்சுக் கோர்ப்பவர் பயிற்சியாளர் .. | 58 |
| ஆ. லெட்டர் பிரஸ் மெஷின் பயிற்சியாளர் .. | 76 |
| இ. புத்தகம் கட்டுபவர் பயிற்சியாளர் .. | 77 |
| ஈ. மோனோ காஸ்டர் பயிற்சியாளர் .. | 2 |
| உ. மோனோ கீபோர்ட் ஆப்பரேட்டர் பயிற்சியாளர். | 3 |
| ஊ. லைனோ கீபோர்ட் ஆப்பரேட்டர் பயிற்சியாளர். | 6 |
| | 222 |

(ஆ) அரசு மத்திய அச்சகம், கிளை மற்றும் மண்டல அச்சகங்களில் பயிற்சி முடித்த பயிற்சியாளர்கள் அகில இந்திய தொழில் நுட்பத் தேர்வு எழுதவேண்டும். அகில இந்திய தொழில் நுட்பத் தேர்வில் தேர்ச்சி பெற்றபின் பயிற்சியாளர்கள் தங்களுடைய பெயர்களை வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்திடல் வேண்டும். பயிற்சியாளர், வேலை காலியாகும் பொழுது வேலைவாய்ப்பு நிறுவனங்களிலிருந்து பயிற்சி பெறுவோரின் பட்டியல் பெற்று நேர்முகத் தேர்வு நடத்தி தேர்வுக் குழுவினரால் அவர்களின் தகுதிகள் ஆய்ந்து தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

(இ) தொழிற் பழகுநர் சட்டம் 1961, விதி 22 (1)-ல் தங்கள் நிறுவனங்களில் பயிற்சி முடிந்த பயிற்சியாளர்களுக்கு வேலை அளிக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், அவ்வாறே பயிற்சியாளரும் வேலையை ஒப்புக்கொள்ள கடமைப்பட்டவர் அல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

பயிற்சியாளர்கள் தங்கள் பயிற்சியினை முடித்தவுடன் அகில இந்திய தொழில் நுட்பத் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். தேர்ச்சி பெற்றோர் வேலைவாய்ப்பு நிறுவனங்களில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். வேலை காலியாகும் போது எழுதுபொருள் அச்சுத் துறையினால் வேலைவாய்ப்பு



1984 அக்டோபர் 15]

நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இந்த நிறுவனங்களிலிருந்து பெறப்படும் பட்டியலிலிருந்து நபர்கள் மேற்படி துறையின் தேர்வுக் குழுவினரால் நேர்முகப் பேட்டி கண்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

### ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் 1983-ல் மலைவாழ் மக்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு.

188—வினா 19846—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் 1983-ம் ஆண்டு சக்கரைப்பட்டி, பெருமாபட்டி ஆகிய கிராம மலைவாழ் மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

### சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் பள்ளிகள்.

189—வினா 19880—திரு. சி. கணேசன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அப்பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் எத்தனை பேர் ?

(இ) அம்மாணவர்களுக்கு 1981 ஆம் ஆண்டிற்கு கொடுக்க வேண்டிய சீருடைகள் கொடுக்கப்பட்டு விட்டனவா ?

விடை—

(அ) சேலம் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படும் பள்ளிகள் நாற்பத்து ஏழு ஆகும். (இதில் ஆதி திராவிடர்கட்கு பதினைந்து பள்ளிகளும், பழங்குடியினர்க்கு முப்பத்திரண்டு பள்ளிகளும் ஆகும்.)

(ஆ) அப்பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகள் மொத்தம் நாலாயிரத்து எழுநூற்று எழுபத்து ஏழு ஆவர். (இதில் ஆதி திராவிடர் மாணவர்கள் இரண்டாயிரத்து அறுநூற்று பதினொரு பேரும், பழங்குடியினர் இரண்டாயிரத்து நூற்று அறுபத்தாறு பேரும் ஆவர்.)

(இ) ஆம். இம்மாணவர்கட்கு சீருடைகள் 1981 ஆம் ஆண்டிற்கு கொடுக்கப்பட்டு விட்டது.

### பேராம்பூர் குளத்தை தூர்வாரி மராமத்து செய்யும் திட்டம்.

190 — வினா 19882—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் உள்ள பேராம்பூர் பெரிய குளத்தை தூர்வாரி மராமத்து செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை. இக்குளத்தை சீரமைத்தல், தூர்வாரல் மற்றும் புனரமைத்தல் நடைமுறை விதிகளுக்குள் வராததால், இதனை மராமத்துப் பணிகள் ரூ. 20,000க்கு வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### ஊட்டி, மைசூர் சாலையில் உள்ள நடுவட்டத்தில் பஸ் நிலையம் மற்றும் கழிப்பறை கட்டும் செயற்குறிப்பு.

191 —வினா 19994—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊட்டி, மைசூர் சாலையில் உள்ள நடுவட்டத்தில் பஸ் நிலையம் மற்றும் கழிப்பறை வசதி செய்து தர அரசு முன் வருமா ?

விடை—

உதகமண்டலம் மைசூர் சாலையில் உள்ள நடுவட்டத்தில் பேருந்து நிலையம் 1975 ஆம் ஆண்டிலேயே கட்டப்பட்டு நடுவட்டம் பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டும் வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் கழிப்பறை கட்டிடம் கட்டுவதற்கான மதிப்பீடு ரூ. 90,000 அளவில் தயாரிக்கப்பட்டு, பேரூராட்சி நிதியிலேயே கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### NUMBER OF TUBE WELLS PROGRAMMED TO SINK IN CHENGALPATTU DISTRICT.

192— *Q.* 20061 : Thiru P. VENKATASUBRAMANIAM : Will the Hon. the Minister for Irrigation be pleased to state :

(*a*) the number of tube wells programmed to be sink in Chengalpattu District ; and

(*b*) the number so far sunk ?





விடை—

(அ) தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகம் ஜூன் 83 முடிய செங்கல்பட்டு மாவட்டத்தில் 30 குழாய்க் கிணறுகள் போடுவதற்கு திட்டமிட்டிருக்கிறது.

(ஆ) இதுவரை 4 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

### பெரம்பலூர் நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகட்டும் திட்டம்.

193—வினா 20076—திரு. ஜே. எஸ். , இராசு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் (Housing Board) மூலம் பெரம்பலூர் நகரில் வீடு கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

விடை—

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகை குடியிருப்புத் திட்டங்கள் மாவட்ட தலைநகரங்கள் மற்றும் கோட்டாட்சி தலைநகரங்களில் மட்டும் செயல்படுத்தப்பட வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பெரம்பலூர் நகர் மாவட்டத் தலைநகரமாகவோ அல்லது கோட்டாட்சித் தலைமை இடமாகவோ இல்லாததால் மேற்குறிப்பிட்ட திட்டம், வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்படவில்லை.

### நெல்லை, குமரி மாவட்டங்களில் பனஞ் சர்க்கரை ஆலைகள் நிறுவும் செயற் குறிப்பு.

194 —வினா 20083—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை குமரி மாவட்டங்களில் பனஞ் சர்க்கரை ஆலைகளை அரசு நிறுவுமா ?

விடை—

1. நெல்லை மாவட்டத்தில் தற்போது பனஞ் சர்க்கரை ஆலை நிறுவும் உத்தேசம் எதுவும் இல்லை.

2. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதங்கோடு என்னுமிடத்தில் ரூ. 38.586 இலட்சம் மதிப்பில் பனைப் பொருள் உற்பத்தி மையம் ஒன்றை நிறுவுவதற்கான திட்டம் ஒன்று தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் ஆளுகையின் கீழ் உள்ள கதர் கிராமத் தொழில்கள்.**

195—வினா 20137—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர்வாரியத்தின் ஆளுகையின் கீழ் உள்ள கிராமத் தொழில்கள் எத்தனை? இதில் ஆரம்ப மாவட்ட மாநில கூட்டுறவு சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) இதில் கலைக்கப்பட்டது எத்தனை? கலைப்பு நடவடிக்கையில் உள்ளவை எத்தனை?

விடை—

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் ஆளுகையின் கீழ் 18 கதர் கிராமத் தொழில்கள் உள்ளன.

இதில் 3,033 ஆரம்ப கூட்டுறவு சங்கங்களும், 10 மாவட்ட கூட்டுறவு சம்மேளனங்களும், 2 மாநில கூட்டுறவு சம்மேளனங்களும் உள்ளன.

(ஆ) கலக்கப்பட்டவை 24 கூட்டுறவு சங்கங்கள், கலப்பு நடவடிக்கையில் உள்ளவை 1,010 கூட்டுறவு சங்கங்கள். இதில் இரண்டு மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனங்களும், ஒரு மாநில சம்மேளனமும் அடங்கும்.

**திமிரி பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு.**

196—வினா 20401:—திரு ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி திமிரி பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை:—

இப்பள்ளிக்குக் கட்டடம் கட்ட இப்பள்ளியின் கட்டடக்குழு வாங்கியுள்ள 2.12 ஏக்கர் நிலத்தை பள்ளிகட்டடம் கட்ட பயன் படுத்திக் கொள்ளுவது என்று மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவுப்படி, மேற்படி நிலத்தை கல்வித்துறைக்குப் பத்திரம் மூலம் மாற்றிப் பதிவு செய்யும் பணி பள்ளிக் கல்வி இயக்குநர் அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலம் கல்வித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து இப்பள்ளிக்குக் கட்டடம் கட்டுவது பரிசீலிக்கப்படும்.





**திண்டுக்கல் வேளாண்மைப் பொறியியல் பிரிவிற்கு ஆழ் கிணறு துளையிடும் கருவி வழங்கும் செயற்குறிப்பு.**

197—வினா 20428—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் இயங்கிவரும் வேளாண்மைப்பொறியியல் பிரிவில் ஆழ்கிணறு துளையிடும் இயந்திரம் (Wagon Drill) இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம், எனில், அதை வழங்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1983—84 ஆம் ஆண்டு புதிய திட்டங்களுள் ஒன்றான மூன்று ஆழ்கிணறு துளையிடும் இயந்திரங்கள் வாங்க இவ்வாண்டு மே மாதம் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த இயந்திரம் வாங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இயந்திரம் வாங்கியவுடன் திண்டுக்கல் பொறியியல் பிரிவு அலுவலகத்திற்கு ஒன்று ஒதுக்கீடு செய்யப்படும்.

**செங்கற்பட்டு நகரில் கல்லூரி மாணவிகட்கு விடுதி கட்டித்தரும் செயற்குறிப்பு.**

198—வினா 20438—திரு. சி. கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் கல்லூரி மாணவிகட்கு விடுதி கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தமிழகத்தில் நரிக் குறவர்களுக்காக கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை வீடுகள் எந்த மாவட்டத்தில் அதிகமாக கட்டப்பட்டதன் விவரம்.**

199—வினா 20471—திரு. சி. கணேசன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நரிக்குறவர்களுக்காக கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளன?

(ஆ) எந்த மாவட்டத்தில் அதிக அளவிலான வீடுகள் கட்டப்பட்டன?

விடை —

(அ) மற்றும் (ஆ)—கடந்த 5 ஆண்டுகளாக நரிக்குறவர்களுக்கு வீடுகள் எதுவும் கட்டித்தரப்படவில்லை. நடப்பாண்டில் வடஆற்காடு மாவட்டம், செய்யார் வட்டம், அரும்பருதி கிராமத்தில் நரிக்குறவர் குடும்பங்களுக்கு 76 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆணை வழங்கியிருக்கிறது.

குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. தகவல் கோரல்.

### தமிழக முதல்வர் அவர்கள் உடல் நலம் குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர்களில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் யாருமே இன்னும் வரவில்லை. மாண்புமிகு முதலமைச்சரின் உடல் நிலை.......... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அனைவரும் உட்காருங்கள், நான் சொல்கிறேன்.

முந்தா நாள் இரவு நானும், நாவலர் அவர்களும், முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினோம். ஏறக்குறைய 10 நிமிடங்களுக்கு மேலாக நானும் அமைச்சர் பெருமக்களும், மற்றும் பல பேர்களும் அவரைச் சந்தித்தோம். அவர்களுடைய நண்பர்களும் வந்து சந்தித்தார்கள். அவருடைய உறவினர்களும் வந்து சந்தித்தார்கள். அதற்குப் பிறகு அவருடைய பெரிய அண்ணார் சக்கரபாணி அவர்கள் வந்தபோதுதான் நாங்கள் வெளியே வந்தோம்.

எங்களிடத்திலே மிக சுறுசுறுப்பாகவும், உணர்ச்சி வசமாகவும் பேசிக் கொண்டிருந்தார்கள். எனக்கு ஒன்றும் நோய் இல்லை. நீங்கள் எல்லாம் பயப்படாதீர்கள் என்று அவரே எங்களிடத்தில் சிரிப்போடும், விளையாட்டுடனும் பேசிக் கொண்டிருந்தார்கள். அதனால் நான் உற்சாகமாகி, நேற்று கூட வெளியூர் சென்று இன்று காலையில் வந்தேன். 5 மணிக்கு, காலையில் வந்தவுடனேயே மருத்துவ மனைக்குப் போய் பார்த்தேன். உள்ளே போய் பார்க்கும்போது, டாக்டர்கள் அவர் பக்கத்திலே நின்று கொண்டிருந்தார்கள். காலையில் 5 மணிக்கு அவர்களைக் கேட்டபோது, அவருக்கு சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள்.



அதைக் கவனிப்பதற்காக அமெரிக்காவில் இருந்து டாக்டர்களை வரவழைப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், அந்த ஏற்பாடுகளை அமைச்சரவை கவனித்துக் கொண்டிருப்பதாகவும் அரசுத் துறை அதிகாரிகள் என்னிடத்தில் தகவல் சொன்னார்கள். எனவே, அமைச்சர் ஹண்டே அவர்களும், மற்ற அமைச்சர்களும் மருத்துவ மனையில் இருக்கிறார்கள். அவர்கள் வந்தவுடனே ஒரு அறிக்கையைத் தருவார்கள். அது வரையில் பொறுமையாக இருக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

அவருடைய நிலைமையைப் பற்றி, இப்பாது கூட அவருடைய அறையில் இருந்த உறவினர் ஒருவர் மூலமாக தொலைபேசி மூலமாகக் கேட்டபோது, அவர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள், நல்லபடி இருக்கிறார்கள் என்ற செய்தியை, இரண்டு நிமிடங்களுக்கு முன்னால் சொன்னார்கள். இப்போது அவையில் ஒரே ஒரு அமைச்சர்தான் இருக்கிறார். ஆகவே, அவையை ஒரு மணி நேரம் ஒத்தி வைத்து, பிறகு வேண்டுமானால் கூட்டலாமா ?

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய உடல் நிலை குறித்து தாங்கள் இங்கே விடுத்த செய்திக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் குணம் பெறவேண்டும். முன்பு போலவே உற்சாகமாக, மலர்ந்த முகத்தோடு இந்த மன்றத்திற்கு வரவேண்டும், மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற பிரார்த்தனையை நாங்கள் பிரார்த்திக்கிறோம். இந்த மாமன்றமும் பெரிதும் விரும்புகிறது.

ஆனால் அதேநேரத்தில் இந்த மாமன்றத்திலே பல்வேறு முறைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இங்கே கொடுக்கப்படுகின்ற செய்திகள் முழுமையானதாக இல்லை. ஒரு செய்தியைப் போல இருக்கிறதே தவிர, அறிக்கையாக இருப்பதேயில்லை. முதலமைச்சருக்கு சிகிச்சை அளிப்பதிலே தீவிரமான முன் எச்சரிக்கையோடு முனைப்போடு மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இப்பொழுது கூட நீங்கள் கொடுத்திருக்கின்ற செய்தி, மகிழ்ச்சியையும் மன நிறைவையும் அளிப்பதாக இருந்தாலும் கூட, பத்திரிகைகளில் வந்திருக்கக்கூடிய செய்திகள், நேற்றும், இன்று காலையிலும் வந்திருக்கக்கூடிய செய்திகள் மிகுந்த கவலையை அளிப்பதாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்தின் மூலமாக வரக்கூடிய செய்தி முழுமையானதாக இருக்க வேண்டும். ஒரு செய்தியாக இருக்கக்கூடாது, அறிக்கையாக இருக்க வேண்டும். எதிர்க்கட்சி வரிசையிலிருந்து சொன்னாலும், அல்லது அந்தப் பக்கத்திலே யிருந்து சொன்னாலும், அதற்குத் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் உளிட உ. நிலையை கவனிப்பதற்காக ஏதாவது அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா? எந்த முறையிலே எதிர்காலத்தில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட இருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் இப்பொழுது சபையை ஒத்திவைத்தாலும், . கூட, வருகின்ற அமைச்சர் அவர்கள் 'கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேந்றைக்கு முன் தினம் சபையிலே உறுப்பினர்கள் எழுப்பிய நிலையை தொடர்ந்து தாங்கள் சென்று பார்த்ததாக சொன்னதற்கு நாங்கள் உங்களுக்கு மிகவும் கட்டுப்படுகிறோம் என்றாலும் எங்களுடைய தலைவர் சட்ட மன்ற மேலவையிலே சொன்ன பிரகாரம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை வைக்கிறார்கள். இதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா என்று மிக வருத்தத்தோடு கேட்டார்கள். ஏன் என்றால் நிலைமை மோசமாக இருப்பதாக செய்தி வருவதை மறைத்து செய்தி வெளியிடுகிறார்களா என்ற கவலையோடு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் மேலவையிலே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்வதற்கும் பத்திரிகையிலேவருவதற்கும்வேறுபாடுகள் இருந்துகொண்டே வந்திருக்கின்றன. இங்கேயே சிகிச்சை செய்து கொள்ளலாம் வெளிநாட்டுக்கு செல்ல வேண்டியது இல்லை நம்முடைய டாக்டர்களை நாம் குறைவாக மதிப்பிடுவதற்கில்லை என்று சொல்லி காலங்கழித்து தட்டி கழித்து இப்படிப்பட்ட நிலைமை வந்து விட்டதோ என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கருதுகின்றோம். தேவையான நடவடிக்கைகளை முன்னதாகவே எடுத்து இருந்தால் நிலைமை இவ்வளவு சீர்கெட்டு இருக்காது என்று நாங்கள் கருதுகிறோம். இனிமேல் சிசிச்சைக்கு வெளிநாட்டிலிருந்து டாக்டர் வருவதாக சொல்கிறார்கள். உடனடியாக தேவையான எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்கும் முதல்வருக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவர்கள் நீண்ட நாள் வாழவேண்டும் நன்றாக இருக்கவேண்டும் என்பதில் திராவிட முன்னெற்றக் கழகம் என்றைக்கும் உறுதியோடு இருக்கிறது. அவர்கள் நீண்ட நாள் வாழவேண்டும் அதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தங்கள் மூலமாக இப்போது வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை பத்திரிகையைப் பார்த்து மிகுந்த கவலையும், வேதனையும் அடைந்தோம். ஆனால் உங்களுடைய அறிவிப்பு கொஞ்சம் எங்களுக்கு தெம்பு தந்துள்ளது. ஒரு விஷயத்தை முக்கியமாக இந்த அவையில் வற்புறுத்தி சொல்லவேண்டியிருக்கிறது. எங்களுக்கு இங்கே சொல்லப் படுகிற விஷயங்கள் அடுத்த நாள் பத்திரிகையில் வருகிற செய்திகளைப் பார்க்கிறபோது





இங்கே சொல்லப்படுகிற செய்தி பின்தங்கிய செய்தியாகவும் வேறு விதமான செய்தியாகவும் இருக்கிற அவல நிலை இருக்கிறது. இது ஏன் இப்படி ஏற்படுகிறது என்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த அவைக்கு முதலமைச்சர் அவர்களுடைய உடல்நிலையைப் பற்றியும் அவர் சௌகரியமாக தேர்ந்து பலம் பெற்று இங்கே வந்து நாம் நடத்துகின்ற நிகழ்ச்சிகளிலே பங்கு எடுத்து கொள்ளவேண்டும் என்பதை மிகுந்த ஆவலோடு நாம் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்ப்பார்க்கிறோம். அவர் உற்சாகமாக இருக்கிறார் என்று இங்கே ஒவ்வொரு தடவையும் சொல்லப்படுகிறது. அதைக் கேட்டு திருப்தி அடைந்து வெளியே போகிறபோது வேறு விதமாக செய்திகள் வருகின்றன. ஆகவே, நிலைமையை பற்றி உள்ளது உள்ளபடி, பத்திரிகையிலே வருவதை விட குறைவான செய்திகளாக இல்லாமல் இங்கே தரப்பட வேண்டும். இதிலே என்னமோ ஒரு ஊனம், குறை இருப்பதாகத் தெரிகிறது. மாண்புமிகு தலைவர் அவர்கள் இதிலே பிரத்தியேகமாக கவனம் செலுத்தி அரசுக்கு எடுத்துக் காட்டி சீர்செய்வதோடு அவ்வப்போது இந்த விவரங்களை இந்த அவையில் இருக்கிற அத்தனை பேர்களுக்கும் தெரிவிக்கவேண்டும். அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் துரிதமாக தேறி இங்கே திரும்பவும் நம் மத்தியில் வரவேண்டும் என்ற ஆசையை தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய உடல்நிலை பற்றிய செய்திகள் அனைவருக்கும் மிகவும் கவலை அளிக்கக்கூடிய செய்தியாக இருக்கிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த அவையிலே அவருடைய உடல்நிலைப் பற்றிய அறிவிப்புக்களையும் அனைத்து கட்சிகளை சேர்ந்த தலைவர்களும் உறுப்பினர்களும் இங்கே எழுப்பக் கூடிய நேரத்திலே அரசு தரப்பிலே இருந்து அறிக்கையும் அளிக்கப்படுகின்றது. வெளியில் இருக்கக்கூடிய செய்திகள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் அதைப்பற்றிதான், சொல்லியிருக்கிறார்கள். டாக்டர் ஹண்டே அவர்கள் அங்கேதான் மருத்துவமனையில் இருக்கிறார்கள். உங்களுடைய உணர்வுகளை பூராவையும் நான் அரசு துறைக்குத் தெரிவிக்கிறேன். தெரிவித்து அதற்கு ஏற்ற பதிலை வாங்கித் தருகிறேன். (குறுக்கீடு)

(முற்பகல் 9-10)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்து விடுகிறேன். இங்கே அறிவிக்கக்கூடிய நேரத்திலே உற்சாகம் அடைந்து அடுத்த நிமிடமே அந்த உற்சாகம் அனைவருக்கும் போய்விடக்கூடிய நிலைமை இருக்கிறது. எல்லோருடைய விருப்பமும் அவர்கள் உடனடியாக நல்ல முறையில் தேறி வர வேண்டும் என்றும், திடகாத்திரத்தோடு வாழ வேண்டும் என்றும்,

[திரு. இரா. கருப்பையா) [1984 அக்டோபர் 15

இங்கே வந்து நடவடிக்கைகளை கவனிக்க வேண்டும் என்பதுதான். இதில் இருக்கக்கூடிய கவலை, செய்திகளைப் பார்க்கக்கூடிய நேரத்திலே மருத்துவர்கள் வெளியே கூறக்கூடிய அபிப்பிராயங்கள் வேறு விதமாக இருக்கிறது. ஆகவே சரியானமுறையில் தகவல்களைக் கொடுத்து சரியான உரிய முறையில் உடனடியாக கவனிப்பதற்கு அவர் வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டும் என்றாலும் அதில் தாமதப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆகவே உடனடியாக அரசு முடிவு செய்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமெரிக்காவிலிருந்து டாக்டர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாளை மாலை வந்து விடுவார்கள். அவர்கள் அறிக்கைகள் தருகிற வரைக்கும் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக்கொண்டு சபையை இப்போது ஒத்திவைத்து மீண்டும் 10-30 மணிக்கு சபை கூடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர் பேரவை முற்பகல் 9—11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மீண்டும் பேரவை காலை 10-30 மணிக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் திரு. க. ராசாராம் அவர்கள் தலைமையில் கூடியது.

## 3. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதி 31 ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கட்சிகளினுடைய தலைவர்கள் அத்தனைபேர்களையும் கலந்து கொண்டதற்கிணங்க வினாக்கள்—விடைகள் நேரத்தையும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தினுடைய நேரத்தையும், மற்றவற்றையும் ஒத்தி வைக்கலாம் என்றும், மிக முக்கியமாக இப்பொழுது வாதத்தில் இருக்கின்ற, 1984—85-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளின் விவாதம் இன்றி நிறைவேற்றுவது என்றும், ஆகவே விதிகளைத் தளர்த்தி, நிதி ஒதுக்கீடு மசோதாவையும் இன்றே நிறைவேற்றி விடுவது என்றும், அதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வரவர்களுடைய உடல்நிலை தேறுகின்ற வரையில் இதனை ஒத்திவைப்பது என்றும் எல்லாத் தலைவர்களும் சேர்ந்து முடிவெடுத்ததற்கிணங்க—சிலபல தீர்மானங்களைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அவற்றை நான் கொண்டு வருகிறேன். அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1984 அக்டோபர் 15]

தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி ஐ இன்று 15-10-1984 ஆம் தேதியன்று தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

### (ஆ) அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30, உள்விதி 3-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 2—54-ஆம் விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று உள்ளதை ஒத்திவைத்து, மற்றவற்றைத் தொடர்ந்து வரிசைப்படியே எடுத்துக்கொள்ளலாம்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

## 4. அறிக்கை அளித்தல்

### 4. தமிழக முதல்வர் அவர்கள் உடல் நலம் குறித்து அறிக்கை அளித்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று காலை மாண்புமிகு முதல்வரவர்களுடைய உடல்நிலையைப் பற்றி அப்போலோ மருத்துவமனைக்குச் சென்று, நானும் மற்றைய அமைச்சர்களும் அவர்களோடு உரையாடி, இருக்கின்ற நிலையை இந்த அவைக்கு வைப்பது பொருத்தமானது என்று கருதி, இந்த அவை முன் வைக்க நான் விரும்புகிறேன்.

கடந்த ஒரு வாரகாலமாக, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை, வெளிநாட்டுக்கு, சிறுநீரகச் சிறப்புச் சிகிச்சை பெறுவதற்கு அனுப்பலாமா என்று முடிவு செய்யப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சிறு நீரகக் கோளாறுகளுக்கான சிகிச்சைபெறும் முதல்வருக்குச் சனிக்கிழமை இரவு, மூளையின்

உட்பகுதியில், ஒரு இரத்தக் குழாயில் ஏற்பட்ட இரத்த உறைவினால், உடலின் வலப்பகுதி ஓரளவு இயல்பாக இயங்கவில்லை. தற்போது, இக்கோளாறுகளுக்கான சிகிச்சைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு, ஓராளவுக்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளது முதல்வர் அவர்கள் சுயநினைவோடு இருக்கிறார்கள். கை, கால்கள் அசைவில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சிறுநீரகத்தின் இயக்கமும் முன்னேற்றம் கண்டுள்ளது. இரத்தத்தில் உள்ள யூரியா உப்பு 180-ஆகக் குறைந்திருக்கிறது. சர்க்கரை அளவும் கணிசமாகக் குறைந்திருக்கிறது. இரத்த அழுத்தம் இயல்பாக இருக்கிறது. நரம்பியல் மற்றும் சிறுநீரக மருத்துவத்துறையின் வல்லுநர்கள் நால்வரை அமெரிக்காவிலிருந்து வரவழைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவருக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவ வல்லுநர்கள் மாண்புமிகு முதல்வர் இப்பயணத்தை மேற் கொள்ளமுடியும் என்று முடிவு செய்யும்போது, மாண்புமிகு முதல்வர் மேலும் சிறந்த சிகிச்சைக்கு அமெரிக்க நாட்டிற்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். அதற்கு மத்திய அரசின் உதவியோடு இந்திய விமானப்படையைச் சேர்ந்த தனி விமானம் ஏற்பாடு செய்யப்பட்டு, ஆயத்தமான நிலைமையில் இருக்கிறது.

இங்குள்ள மருத்துவ வல்லுநர்குழுவின் தீவிரக் கண்காணிப்பின் அடிப்படையில், தேவைப்படும் சிகிச்சைகள், முறைப்படி அளிக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்க நாட்டின் நான்கு மருத்துவ வல்லுநர்களும், நாளை மறுநாள், அதாவது புதன்கிழமை காலை இங்கு வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

அது மட்டுமல்லாமல், இடைக்காலத்தில், பம்பாயிலுள்ள தலைசிறந்த நரம்பியல் வல்லுநரில் ஒருவரான டாக்டர் நோஷர் வாடியா அவர்களையும், வரவழைக்க ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதோடு, மாண்புமிகு முதல்வருக்கான சிகிச்சைகளை முறைப்படுத்தி கண்காணிக்க கீழ்க்கண்டவர்கள் அடங்கிய மருத்துவக் குழு திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் குழுவிற்கு கோ-ஆர்டினேட்டராக அதாவது ஒருங்கிணைப்புப் பொறுப்பாளராகத் தமிழக அரசினுடைய நல்வாழ்வுத்துறையின் ஆணையர் மற்றும் செயலர் செயல்படுவார். இந்தக் குழுவில் மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் திருமதி லலிதா காமேசுவரன், மருத்துவத்துறை பேராசிரியர் டாக்டர் கே. வி. திருவேங்கடம், அப்போலோ மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர் பி. சி. ரெட்டி, சிறுநீரக இயல்துறை நிபுணர் டாக்டர் எம். கே. மணி, மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பி. நரேந்திரன், நரம்பியல் துறை நிபுணர்





டாக்டர் கே. ஜகந்நாதன், சிறுநீரக இயல்துறை நிபுணர் டாக்டர் கே. எஸ். இராமலிங்கம், முதல்வரின் தனி மருத்துவர், டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம், நீரழிவுத்துறை வல்லுனர் டாக்டர் வி. சேஷையா ஆகியோர் உள்ளனர். இவர்கள் அடங்கிய மருத்துவக் குழு திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றது.

தக்க அவசர நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்கு நிதியமைச்சர் தலைமையில் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய அமைச்சரவையின் உட்குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டிருகின்றது. தேவைப்படும்போது மற்றவர்களைக் கலந்துகொண்டு இக்குழு தக்க முடிவுகளை மேற்கொள்ளும். அமைச்சரவையின் உட்குழு உறுப்பினர்கள் வருமாறு :—மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு சா. இராமச்சந்திரன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே இதற்குத் தலைமைச் செயலாளர் அவர்கள் செயலாளராகவும் பொறுப்பாளராகவும் இருந்து பணியாற்றுவார்கள்.

## 5. அரசினர் தனித் தீர்மானம்

### தமிழக முதல்வர் அவர்கள் உடல் நலம் பெற வேண்டிக்கொள்ளுதல்

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடம் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன் நீங்களே ஒரு தீர்மானத்தை அதாவது இந்த அவை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகின்ற இந்த நிலையில் நம்முடைய முதல்வர் வெகு விரைவாக உடல்நலம் தேறி மீண்டும் வரக்கூடிய நிலைமை ஏற்பட வேண்டும் என்று இந்த அவையினுடைய ஒரு தீர்மானமாகவே கொண்டுவந்து நிறைவேற்றுவது அவசியம் என்று நான் கருதுகிறேன். இது ஒன்று. இரண்டாவதாக இத்தனை நாட்களாக எங்கள் பலருக்கும் அவருடைய நிலையில் அவரைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் மிகவும் இருந்தது. ஆனால் ஒரு பக்கத்திலே அப்படி பார்ப்பதனால் அவர்களுடைய உடல்நலம் பாதிக்கப்படும் என்று ஒரு நிலை. மறு பக்கத்திலே நாங்கள் பார்க்கவில்லையே என்கிற போது எங்களுக்கு மனதிலே ரொம்ப சங்கடமும், கஷ்டமும் அதிகமாக ஆகி இருக்கின்றது. இப்படி மனதிலே மோதிக் கொண்டிருக்கின்ற நிலைமையில் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் தாங்கள் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்து கட்சியின் தலைவர்களாவது அவரைச் சந்திப்பதற்கு டைம் மாறி, மாறி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 அக்டோபர் 15

பிக்ஸ் பண்ணி ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். ஏனென்றால் எங்களுக்கு மனசு தாங்க முடியவில்லை. ஆகவே தயவு செய்து ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த இரண்டு யோசனைகளையும் நான் உங்களிடத்திலே தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் . நிறைவேற்று வது பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், இன்று காலையில் சபையை ஒத்திவைத்து விட்டதற்குப் பிறகு நான் மருத்துவ மனைக்குப் போய்விட்டு வந்தேன். அங்கே டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் முந்தாநாள் ராத்திரி அவர் எல்லோ ரையும் சந்தித்துப் பேசியதன் விளைவுதான் ஹார்ட் ட்ரபிள்ஸ் எல்லாம் ஏற்படுகின்றது என்று சொல்கிறார்கள். ஆகவே அவரைக் கொஞ்ச நாட்களுக்குத் தனிமைப்படுத்தி டாக்டர் கள் மட்டும் பரிசோதித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் இருக்கட்டும் என்று சொல்கிறார்கள். அமெரிக்காவிலே இருந்து டாக்டர்கள் வந்து பார்த்ததற்குப் பிறகு, அவர்கள் அபிப்பிராயம் எல்லாம் தெரிந்ததற்குப் பிறகு பார்க்கலாம் என்றால் அதற்கான ஏற்பாடுகளை வேண்டுமானால் பண்ண லாம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூறிய உணர்வின் அடிப்படையில் முதல்வர் அவர்களை கட்சியின் தலைவர்கள் சென்று பார்ப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்து வதைப் பொறுத்த வரையில் அதற்கான சூழ்நிலைகள் வந்து மருத்துவ வல்லுநர்கள் அனுமதிக்கின்ற சூழ்நிலை ஏற்படுமே யானால் அந்த நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் சென்று பார்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள் வோம் என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எடுத்துக் கூறிய அந்த கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல்நலம் குன்றி சிகிச்சைக்காக அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதிலிருந்து இந்த அவையைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கலக்கம் கொண் டிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் விரைவிலே உடல்நலம் பெற்று எப்போதும் போல் தம்முடைய பணிகளைச் சிறப்புற ஆற்ற வேண்டும் என்று இந்த அவையினர் கருதுகிறார்கள். ஆகவே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை வாய்மொழியாகவே மொழிகிறேன் :—

'' மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச் சந்திரன் அவர்கள் மிக விரைவில் உடல்நலம் பெற்று எப்போதும் போல், உள்ள உறுதிப்பாட்டோடும் எல்லா வகை நலன்களோடும் திகழ வேண்டும் என்ற விருப்பத்தை இந்த அவை ஒருமனதாகத் தெரிவிக்கின்றது. ''



1984 அக்டோபர் 15]

(முற்பகல் 10-40)

திரு. அன்பில் தர்மலிங்கம் : அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் விரைவில் குணம்பெற்று வரவேண்டும் என்ற தீர்மானத்தை வழிமொழிவதோடு முதல் அமைச்சர் அவர் கள் திரும்பி வருகிற வரையில் இந்த அவையையும் ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்தத் தீர் மானத்தை நிறைவேற்றுவதோடு என்னுடைய ரிக்வெஸ்ட் என்ன வென்றால் மாண்புமிகு முதல்வர் அவர்களை யாராவது அரசாங்கத் தரப்பில் அல்லது நீங்கள் போனால், உள்ளே சென்று அவர்களை நேராகப் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் போது Earliest first opportunity அவர் நினைவு இருக்கிற நேரத்தில், அந்த நேரத்தில் அவர்களிடம் இப்படி அவை பூராவும் சேர்ந்து நீங்கள் குணம் அடைய வேண்டும் என்ற ஒரு தீர் மானத்தை நிறைவேற்றியுள்ளது என்ற தகவலை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அது மேலும் அவர்களது உறுதிப்பாட்டை மேம்படுத்த உதவும் என்ற முறையில் கூறுகிறேன்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை வழி மொழிந்து முதல்வர் அவர்கள் விரைவில் பூரண உடல் நலம் பெற்று அவர்கள் இந்த அவைக்கு வந்து முழுமையான முறையில் தன்னுடைய பணியை ஆற்ற வேண்டும் என்று இந்த அவையின் விருப்பத்தைத் தெரிவிக்கக் கூடிய இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வழி மொழிகிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களின் உடல்நிலை குன்றியதை அறிகிற போது நாங்கள் மிகுந்த வேதனைப் படுகிறோம். இன்றைய தினம் நம்முடைய அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை முழுமனதார்க நாங்கள் ஏற்றுக் கொண்டு முதல்வர் அவர்கள் மீண்டும் முன்பு போல் பூரண உடல்நலம் பெற்று இந்த அவைக்கும் நாட்டுக்கும் நல்ல முறையில் பணியாற்றும் உளவிற்கு வர வேண்டும் என்று நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை முழுமனதாக ஆதரிக்கிறேன். முதல்வர் அவர்கள் விரைவில் குணமடைந்து இந்த மாநில மக்களுக்கு தன்னுடைய சேவையைத் தொடர்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என்று நான் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இறைவன் அருளினால் விரைவில் உடல்நலம் பெற்று மீண்டும் இந்த அவையின் அலுவல்களையும் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்புகளையும் செவ்வனே நிறைவேற்ற இறைவன் அவர்களுக்கு அருள் செய்ய வேண்டுமென்று வேண்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை காந்தி-காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சி சார்பில் வழிமொழிந்து பாசமிகு முதல்வர் அவர்கள் பூர்ணமான உடல் நலம் பெற்று இன்று நாட்டு மக்கள் நெஞ்சத்தில் எழுந்திருக்கிற பெரிய கலக்கத்தைப் போக்கி மீண்டும் இந்த அவைக்கும் இந்த நாட்டிலிருக்கிற மக்களுக்கும் தொடர்ந்து பல்லாண்டு சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் பூரண அருள் புரிய வேண்டும் என்று அவன் பொற் பாதத்தில் எங்கள் இதய மலரைத் தூவி வணங்கி அமர்கிறேன்.

திரு. கி. சப்பாநாத கரையாளர் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை வழிமொழிந்து, முதல்வர் அவர்கள் அதி விரைவில் குணமடைந்து மீண்டும் நாட்டுப் பொறுப்புக்களை ஏற்று நடத்த ஆண்டவன் அருள் புரிய வேண்டி அமைகிறேன். வணக்கம்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பாக ஏற்று நம்முடைய மதிப்பிற்கும் மாண்புக்கும் உரிய முதல்வர் அவர்கள் நல்ல உடல் நலம் பெற்று நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று நான் மனப்பூர்வமாக வேண்டிக்கொள்வதோடு இப்போது இந்த அவையை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



THIRU K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker, Sir, all of us are very deeply concerned about the Chief Minister's health. I am one of those, among the millions and millions of people, irrespective of caste, creed and religion, who pray ahat our Hon. Chief Minister Mr. M. G. Ramachandran should be restored to normal health very quickly. He should come over here to execute all his good plans, particularly to the poor people.

Sir, I would also suggest that prayers should be conducted in mosques, churches and temples, so that at least a couple of prayers may be heard by Almightly—whether they believe in Almighty, or not, we believe in God to a considerable extent. This suggestion I am giving to the Government. On behalf of the Muslim Community, I would certainly ask my friends to hold prayers in mosques. Similarly other people should also make arrangements to offer prayers for his longlife, good health, and sound performance in his administration.

Thank you.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையிலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களின் எண்ணம் ஒரே எண்ணம் தான். ஆகவே, இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதாக நான் எடுத்துக் கொள்கிறேன். திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, முதல்வர் அவர்களை முதலில் சந்திக்கின்றவர்கள் இந்தச் சபையின் உணர்வுகளை அவர்களிடம் தெரிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*தீர்மானம் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.*

## 6. அறிவிப்புகள்.

### (அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1978–79 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1978–79 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :—

**Message.**

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demand for Grants for Excess Expenditure for the year 1978-79.

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1978–79—வாக்கெடுப்பு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1978–79 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் அடங்கிய 12–10–1984 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் இரண்டாவது பத்தியில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1978–79 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுகளுக்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1978-79 நிறைவேற்றப்பெற்றவை.

| | | ரூபாய். |
|---|---|---|
| கோரிக்கை 5 | முத்திரைத்தாள்கள்—நிருவாகம். | 15,799 |
| கோரிக்கை 11 | மாவட்ட நிருவாகம் .. .. | 80,32,806 |
| கோரிக்கை 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. | 14,91,731 |
| கோரிக்கை 36 | பாசனம் .. .. | 3,04,91,098 |
| கோரிக்கை 39 | சாலைகளும் பாலங்களும் ... | 9,41,191 |
| கோரிக்கை 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. | 26,59,676 |
| | பெரு மொத்தம் .. | 4,36,32,301 |

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு 1984 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



8. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1984—85 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1984–85 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:—

Message.

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demand for further grants for the year 1984-85.

## 9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1984-85 வாக்கெடுப்பு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1984–85 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள் அடங்கிய 12–10–1984 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் இரண்டாவது பத்தியில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1984–85 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுகளுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

### நிறைவேற்றப்பெற்ற 1984–85 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

A. வருவாய்க் கணக்கில் செலவு.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை 1 | நிலவரித் துறை .. .. | 5,55 |
| கோரிக்கை 3 | மோட்டார் வண்டி வரிச்சட்டங்கள்—நிர்வாகம். | 4,50 |
| கோரிக்கை 4 | பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். | 8,00 |
| கோரிக்கை 8 | தேர்தல்கள் .. .. .. | 44,00 |
| கோரிக்கை 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 41,76 |
| கோரிக்கை 11 | மாவட்ட நிர்வாகம் .. .. | 7,24,7[illegible] |
| கோரிக்கை 13 | நீதி நிர்வாகம் .. .. .. | 2,60 |
| கோரிக்கை 15 | காவல் துறை .. .. .. | 102,5[illegible] |



A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை 17 | கல்வி .. .. .. | 7,15,88 |
| கோரிக்கை 18 | மருத்துவம் .. .. .. | 5,01 |
| கோரிக்கை 19 | பொதுச் சுகாதாரம் .. .. | 1,43,60 |
| கோரிக்கை 20 | வேளாண்மை .. .. | 7,59,47 |
| கோரிக்கை 22 | கால்நடை வளர்ப்பு .. .. | 34,44 |
| கோரிக்கை 28 | சமுதாய நல வளர்ச்சி திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | 2,72,68 |
| கோரிக்கை 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். | 2,57 |
| கோரிக்கை 30 | சமூக நலன் .. .. .. | 4,52,93 |
| கோரிக்கை 32 | பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். | 23,53 |
| கோரிக்கை 33 | வீட்டு வசதி .. .. .. | 19,00 |
| கோரிக்கை 35 | நுகர் பொருள் வழங்கல் .. | 8,00,00 |
| கோரிக்கை 36 | பாசனம் .. .. .. | 4,01 |
| கோரிக்கை 38 | பொதுப்பணிகள் — பணியாளரமைப்புகள், கருவிகள், தளவாடமும். | 5,71 |
| கோரிக்கை 39 | சாலைகளும் பாலங்களும் .. | 54,04 |
| கோரிக்கை 41 | இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. | 1,30,51 |
| கோரிக்கை 42 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும். | 1 |
| கோரிக்கை 43 | பல்வகை .. .. .. | 96,98 |
| கோரிக்கை 45 | காட்டுவளத் துறை .. .. | 9,58 |
| கோரிக்கை 47 | செய்தி சுற்றுலா, திரைப்பட நுட்பவியல். | 10,60 |
| கோரிக்கை 48 | ஊரகத் தொழில்கள் .. .. | 2,33 |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கு .. | 44,76,64 |

B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை 50 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 1. |
| கோரிக்கை 51 | பாசனம் குறித்த மூலதனச் செலவு. | 4,12 |
| கோரிக்கை 52 | பொதுப்பணிகள் — கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | 1 |
| கோரிக்கை 53 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 7,67 |
| கோரிக்கை 54 | சாலைப்போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 2,00 |
| கோரிக்கை 56 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. | 17,06 |
| கோரிக்கை 56 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 2 |
| கோரிக்கை 57 | பல்வகை மூலதனச் செலவு .. | 7,83,59 |
| மொத்தம்—B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு. | | 8,14,48 |

C. கடன்கள் முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் பெரு மொத்தம்.

| | | |
|---|---|---|
| கோரிக்கை 58 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும். | 6,43,61 |
| | பெரு மொத்தம் .. | 59,34,73 |



(முற்பகல் 10-50)

6. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஈ) நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு 1984. (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'பேரவைக்கு ஓர் அறிவிப்பு : தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை, பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(இ) விதிகள் 125 மற்றும் 127-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் 125 மற்றும் 127-ஐத் தளர்த்தி இப்பேரவை நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவுகளை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

[1984 அக்டோபர் 15

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(அ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு 1984—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு 1984—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.



1984 அக்டோபர் 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறவேணடும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக்கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப்பெறுகிறது.

பின்னர் பேரவை முற்பகல் 10-55 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டபடிக்கான விதிகளும், ஆணைகளும்.

158. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி—ஊராட்சி ஒன்றியக் குளங்களில் மீன் பிடிக்கும் உரிமம்—குத்தகை உரிமை விதிகள் இயற்றுவது குறித்த ஊர் வளர்ச்சி — உள்ளாட்சித் துறையின் 8—11—1983 ஆம் நாளிட்ட 1648 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

159. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1984 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை. தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

160. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாம் ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

161. தமிழ்நாடு குழாய் கிணற்றுக் கழகத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான முதலாமாண்டு அறிக்கையும், கணக்குகளும் (தமிழ், ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

162. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டு அறிக்கையும், கணக்குகளும் (தமிழ்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

33. எட்டாவது நிதிக் குழுவிற்கு தமிழக அரசு அளித்த குறிப்புத் தொகுதி 1 இன் சுருக்கமும், எட்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளும் (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு I

*[467 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 88 (வினா 19158)-க்கான விடையைக் காண்க.]*

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் (Drought Prone Areas Programme) மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டப்பணிகள் மத்திய அரசு கூறும் அறிவுரைகளின்படி நிறைவேற்றப்படவேண்டும். இதன் செலவை மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விகிதத்தில் ஏற்பர். மத்திய அரசு கொடுக்கும் நிதி ஒதுக்கீட்டின் அளவைப் பொறுத்து இத்திட்டங்களின் செயல்பாடும் அமையும்.

(2) இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் (32 வட்டாரங்கள்), தருமபுரி மாவட்டம் முழுவதும் (16 வட்டாரங்கள்) இதன் கீழ் செயல்பட்டு வந்தன. ஆனால் மத்திய அரசினால் அமைக்கப்பட்ட ஒரு பணிக் குழு (Task Force) இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பகுதிகள் பற்றி, அங்கு பெய்த சராசரி மழை அளவு, விதைக்கப் பட்ட பரப்புகளின் அளவில் நீர்ப்பாசனம் பெற்ற பரப்பளவு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தது. ஆராய்ந்த பின், இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 வட்டாரங் களையும் தருமபுரி மாவட்டத்தில் 6 வட்டாரங்களையும் இத்திட்டத்திலிருந்து நீக்கிவிடுமாறு இக்குழு பரிந்துரை செய்தது. அதன்படி, மத்திய அரசு மேற்கண்ட வட்டாரங்களை 1982–83ம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின் செயல்பாட்டிலிருந்து நீக்கியுள்ளது. இதனால் இத்திட்டம் செயல்படும் பகுதிகள் குறைந்ததோடு அல்லாமல் இத்திட்டத்திற்கான ஆண்டு நிதி ஒதுக்கீடும் குறைந்தது.

(3) இவ்வாறாக, நீக்கப்பட்ட வட்டாரங்களில் சிவகாசி, வெம்பக்கோட்டை ஆகிய இரு வட்டாரங்களும் அடங்கும். ஆனால் மத்திய அரசின் முடிவின்படி நீக்கப்பட்ட வட்டாரங்களில் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்ட வேலைகளை தொடர்ந்து செயல் படுத்த இயலாது. அதனால் சென்ற 1982–83 ஆம் ஆண்டில் வெம்பக்கோட்டை வட்டாரத்திலுள்ள இராமுத்தேவன்பட்டி கிராமப் பகுதியிலும், சிவகாசி வட்டாரத்திலுள்ள மாரனேரி கிராமப் பகுதியிலும் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்ட வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நடப்பு 1983–84 ஆம் ஆண்டிலும் மேற்கண்ட காரணத்தால் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் இவ்விரு கிராமங்களிலும் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

## இணைப்பு

479 [51-ம் பக்கத்தில் உள்ள உடுக்குறியி வினா எண் 10 (வினா எண் 11,500) க்கான விடையைக் காண்க]

1981ஆம் ஆண்டு சென்னை நகரில் நிகழ்ந்த ஆட்டோ ரிக்ஷா திருட்டு.

| வரிசை எண், நிலையம் மற்றும் குற்ற எண். | தேதி, நேரம் மற்றும் நடைபெற்ற இடம். | புகார் செய்தவரின் பெயர் மற்றும் விலாசம். | பதிவு செய்யப் பட்ட ஆட்டோ ரிக்ஷாவின் எண். | குற்றவாளியின் பெயர் மற்றும் விலாசம். | முடிவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. டி1/37/81 இ.பி. கோ. 379. | சென்னை நகர் வாலாஜா ரோட்டிலுள்ள தர்பார் ஓட்டலுக்கு முன்னால் 12-1-81 அன்று 14-30 மணிக்கு. | திரு. தாவூத், 7, அண்ணா தெரு, ஷெனாய் நகர், சென்னை-30. | ஆட்டோ ரிக்ஷா டி.எம்.இ. 2248. | .. | 13-1-1981 அன்று வாயிட்ஸ ரோடில் கண்டு பிடிக்கப்பட்டது. தவறுதலாக வந்ததென குறிக்கப்பட்டு நடவடிக்கை நிறுத்தப்பட்டது. |
| 2. எப்1/180/81 இ. பி. கோ. 379. | வாலாஸ் ரோட்டில், முனியாண்டி ஓட்டலுக்கு முன்னால் 21-2-1981 அன்று 13-30 மணிக்கு. | திரு. சந்திரன், 5/17, ஜாமல் தெரு, சென்னை-2. | ஆட்டோ ரிக்ஷா டி.எம். இ. 1029. | .. | 23-3-1981 அன்று மெரினா கடற்கரையில் கண்டு பிடிக்கப்பட்டது. தவறுதலாக வந்ததென குறிக்கப்பட்டு நடவடிக்கை நிறுத்தப்பட்டது. |
